இன்னும்
சந்தேகமா?



மேய்ப்பர் G. சுந்தரம்

THANKS TO OUR ALMIGHTY GOD. MAY GOD BLESS YOU AND MAY HOLY SPIRIT LEAD YOU

To the Readers

Dear Beloved Brother/Sister, Thank you for downloading this Ebook. Please note that this Ebook is copyrighted by the author of the book or the publisher of the book or as mentioned in the book. Word of God Ministries is just providing you this ebook as free of cost and it is for your personal use not for commercial purposes.

To the Copyright Owners

Dear Copyright owners, Word of God Ministries is doing this Free Ebook service to help the people who are not able to find the printed copy of your book from various countries arround the world and to the people who are restricted to have the printed materials in their house. And this will help the readers to improve their spiritual life.

If you want your new books to be published here as Free Ebook, kindly EMAIL US at wordofgod@wordofgod.in or CALL US at +91 7676505599, +91 9964747708, +91 9964422489

If you feel that your book should not be published, we are KINDLY REQUESTING YOU TO EMAIL US at wordofgod@wordofgod.in or CALL US at +91 7676505599, +91 9964747708, +91 9964422489. We will remove it from our Free Service as early as possible.

About Word of God Ministries

Word of God Ministries was founded in the year 2007, July 29th with the grace and leading of Almighty God by Bro. Yesudas Solomon as an interdenominational ministry. The popular ministry "**Word of God Team**" is one among our various ministries. Now this ministry has 10 branches such as **1)** Word of God Team, **2)** Mobile Ministry, **3)** Internet Ministry, **4)** Deaf Ministry, **5)** Blind Ministry, **6)** Tribal Ministry, **7)** Computer Ministry, **8)** Audio Ministry, **9)** Video Ministry and **10)** Printing Ministry. We all thank our God with full of our heart for using us in His Great Ministry. We need your continuous prayer support. Our vision is to "Reach the Unreached through Technology". Our websites are: www.WordOfGod.in, www.ChristiansMobile.com, www.FreeChristianEbooks.in, www.IndianBibles.net, www.ChristianAudioBooks.in, www.WordOfGodTeam.com, www.WordOfGodMinistry.in, www.KannadaBible.net, www.KannadaChristian.net, www.PrayForKarnataka.com

இன்னும் சந்தேகமா?

மேய்ப்பர் G. சுந்தரம்

அப்போஸ்தல கிறிஸ்தவ சபை
13 சண்முகராயன் தெரு, புரசைவாக்கம்
சென்னை - 600 007.

First edition: **January 2000**

© **Apostolic Christian Assembly**
Purasawalkam, Chennai – 600 007.

Printing:
S.M. Graphics
Chennai 600 026.
Ph. 372 31 11

முகவுரை

விசுவாசிகளின் உள்ளத்தில் உபதேசங்களைக் குறித்த சந்தேகங்கள் தோன்றலாம். இச்சந்தேகங்கள் அவர்களது ஆவிக்குரிய வளர்ச்சிக்குத் தடையாக இருக்கக்கூடும். எனவே விசுவாசிகள் பொதுவாகக் கேட்கும் வினாக்களுக்கு வேதாகமம் கூறும் பதிலை இப்புத்தகம் தொகுத்தளிக்கிறது.

சுருக்கமாகக் கூறுமிடத்து, தேவனை நன்றியோடும் விடுதலையோடும் நாம் துதிக்கவேண்டும். பாவங்களை அறிக்கையிட்டு, தண்ணீரில் மூழ்கி விசுவாசத்தோடு ஞானஸ்நானம் எடுக்க வேண்டுமென்பதே வேதகட்டளை. நம் வருமானத்தில் பத்தில் ஒன்று கர்த்தருக்கு உரியது. அதை மகிழ்ச்சியுடன் கொடுத்து அவர் தரும் ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்ளவேண்டும். சபைகள் அப்போஸ்தல உபதேசங்களை அடிப்படையாக எடுத்துக் கொள்ளவேண்டும். அவற்றின் வளர்ச்சிக்குப் பரிசுத்த ஆவியின் அபிஷேகம் மிகமிகத் தேவை. அதற்கு அந்நிய பாஷைகளில் பேசுவது முன் அடையாளமாக இருக்கிறது. தனிப்பட்ட விசுவாசியின் பக்தி விருத்திக்கு இந்த அநுபவம் உதவியாக இருக்கும்.

இப்புத்தகத்தின் முதல் ஐந்து கட்டுரைகள் காலஞ்சென்ற மேய்ப்பர் G. சுந்தரம் அவர்களது பிரசங்கங்களை அடிப்படையாகக்கொண்டு எழுதப்பட்டவை. எஞ்சிய இரு கட்டுரைகளும் மேய்ப்பர் சாம் சுந்தரம் அவர்களது பிரசங்கங்களைச் சார்ந்து எழுதப்பட்டன.

சென்னை–7 தொகுப்பாசிரியர்கள்.
ஜனவரி – 2000

பொருளடக்கம்

1.	இன்னமும் சந்தேகமா?	1
2.	துதிப்பதில் சந்தேகமா?	7
3.	ஞானஸ்நானத்தைக் குறித்துச் சந்தேகமா?	12
4.	விசுவாசம் தேவையன்றோ?	19
5.	கையாளும் விதத்தில் சந்தேகமா?	22
6.	தசமபாகங்களைக் குறித்துச் சந்தேகமா?	30
7.	சபையின் அமைப்பைக் குறித்துச் சந்தேகமா?	53

இன்னமும் சந்தேகமா?

துதி

"அப்பொழுது: கர்த்தரிடத்தில் இருந்து அக்கினி இறங்கி, அந்தச் சர்வாங்க தகனபலியையும், விறகுகளையும், கற்களையும், மண்ணையும் பட்சித்து, வாய்க்காலிலிருந்த தண்ணீரையும் நக்கிப்போட்டது" (1 இராஜா. 18:38).

எலியாவைப் போல் தனிமையாய் நின்றாலும் சத்தியத்தை விசுவாசியாதவர் முன்னிலையில், தைரியமாய்த் துதி செலுத்தும்போது கர்த்தர் உன்னை எல்லாக் கட்டுகளிலிருந்தும் விடுவிப்பார். இதுவே அவர் தரும் வாக்குத்தத்தம். ஸ்தோத்திர பலியைச் செலுத்தினால், கர்த்தர் தம்மிடத்திலிருந்து அக்கினியை அனுப்பி, மகத்தான காரியங்களைச் செய்து, நம்மில் அவருடைய நாமத்தை மகிமைப்படுத்துவார்.

இதைப்போலவே முதல் நூற்றாண்டில், எருசலேம் பட்டணத்திலுள்ள ஒரு மேல் வீட்டிலிருந்த நூற்றிருபது பேரும் இந்த ஸ்தோத்திர பலியைச் செலுத்தினார்கள். அங்கேயும் பரிசுத்த ஆவியாகிய அக்கினி அவர்கள்மீது இறங்கி மகத்தான செயல் களைச் செய்தது.

"அல்லாமலும் அக்கினிமயமான நாவுகள்போலப் பிரிந்திருக்கும் நாவுகள் அவர்களுக்குக் காணப்பட்டு, அவர்கள் ஒவ்வொருவர்மேலும் வந்து அமர்ந்தது" (அப். 2:3).

இந்த ஸ்தோத்திர பலியைப்பற்றி தாவீது குறிப்பிடும்போது காளையைக்கொண்டு இடும் பலியைக் காட்டிலும், இது மேலான

பலி என்று கூறினார். *"தேவனுடைய நாமத்தைப் பாட்டினால் துதித்து, அவரை ஸ்தோத்திரத்தினால் மகிமைப்படுத்துவேன்" (சங். 69:30).* கர்த்தரும் அதை ஆமோதித்தார். *"நான் எருதுகளின் மாம்சம் புசித்து, ஆட்டுக்கடாக்களின் இரத்தம் குடிப்பேனோ?"* நீ ஸ்தோத்திரம் செய்; நான் உன்னை விடுவிப்பேன். இதுவே கர்த்தர் உனக்கு இன்று தரும் வாக்குத்தத்தம்.

"நீ தேவனுக்கு ஸ்தோத்திரபலியிட்டு, உன்னதமானவருக்கு உன் பொருத்தனைகளைச் செலுத்தி; ஆபத்துக்காலத்தில் என்னை நோக்கிக் கூப்பிடு; நான் உன்னை விடுவிப்பேன், நீ என்னை மகிமைப்படுத்துவாய்" (சங். 50:14,15) – இதுவே தேவன் விரும்பும் பலி. இதை நீ செலுத்தும்போது மாபெரும் விடுதலையைப் பெற்றுக்கொள்வாய்.

"...அவருடைய நாமத்தைத் துதிக்கும் உதடுகளின் கனியாகிய ஸ்தோத்திரபலியை அவர்மூலமாய் எப்பொழுதும் தேவனுக்குச் செலுத்தக்கடவோம்... இப்படிப்பட்ட பலிகளின் மேல் தேவன் பிரியமாயிருக்கிறார்" (எபிரெயர் 13:15,16).

நாம் தேவனுக்கு மகிமையைச் செலுத்தவேண்டியவர்கள். *"கர்த்தருக்கு மகிமையைச் செலுத்தி, அவர் துதியைத் தீவுகளில் அறிவிப்பார்களாக" (ஏசாயா. 42:12).* அதை அவருக்குச் செலுத்தாவிட்டால், "என் மகிமை எங்கே?" என்று கேட்டு (Demand) பெற்றுக்கொள்வார். *"நான் பிதாவானால் என் கனம் எங்கே? நான் எஜமானானால் எனக்குப் பயப்படும் பயம் எங்கே என்று சேனைகளின் கர்த்தர் தமது நாமத்தை அசட்டை பண்ணுகிற ஆசாரியர்களாகிய உங்களைக் கேட்கிறார்" (மல்கியா 1:6).* அது கர்த்தரது கட்டளை என்றால் நாம் அவரைத் துதிக்க வேண்டும்.

வேதவாசிப்பும், உபவாச ஜெபங்களும் அதிகக் கிரமமாய் உன் வாழ்க்கையில் காணப்படலாம். தேவனைப்பற்றி நல்ல அறிவு உனக்கு இருக்கலாம். இவையெல்லாம் இருந்தாலும் அவரை நீ ஸ்தோத்திரிக்காவிட்டால், அவரை அறிந்திருக்கிறேனென்கிற

எண்ணத்திலும், அவருடைய ஊழியத்தைப் பற்றியதான உன் சிந்தனையிலும் நீ வீணனாகிறாய். இவ்வளவு தெளிவாய் எடுத்துரைத்த பின்னரும் நீ தேவனைத் துதிக்கத் தீர்மானிக்காவிட்டால் பரிசுத்த ஆவியானவர் உன்னைப்பற்றி என்ன கூறுவார்? உணர்வில்லாத உன் இருதயம் இருளடைந்திருக்கிறது என்றுதான் கூறுவார். ஏதோ வைராக்கியத்தில் கோபமாக எழுதுகிறேன் என்று நினைக்கின்றாயோ? அல்லவே அல்ல. துதிக்கவேண்டும் என்ற கட்டளையை ஞாபகப்படுத்துகிறேன். அதனால் கிடைக்கும் ஆசீர்வாதங்களைக் குறைவின்றி நீங்கள் பெற்றுக்கொள்ள வேண்டும் என்பதே என் நோக்கம்.

"அவர்கள் தேவனை அறிந்தும், அவரைத் தேவனென்று மகிமைப்படுத்தாமலும், ஸ்தோத்திரியாமலுமிருந்து, தங்கள் சிந்தனைகளினாலே வீணரானார்கள்; உணர்வில்லாத அவர்களுடைய இருதயம் இருளடைந்தது" (ரோமர் 1:21) என்பதே பரிசுத்த ஆவியானவரின் கூற்று. நான் ஒன்றையும் மிகைப்படுத்திக் கூறவில்லை.

இதைக் கவனிக்கும்போது, "ஏது! துதித்தலைத் தேவன் கட்டாயமாய் அமுலுக்குக் கொண்டுவருகிறாரோ?" என்றதொரு சந்தேகம் உன் உள்ளத்தில் தோன்றலாம். ஆம்! துதியை இஸ்ரவேலருக்கு ஒரு பிரமாணமாக ஏற்படுத்தியிருக்கிறார் என்பது உண்மைதான்.

"நம்முடைய பெலனாகிய தேவனைக் கெம்பீரமாய்ப் பாடி, யாக்கோபின் தேவனைக்குறித்து ஆர்ப்பரியுங்கள். தம்புரு வாசித்து, வீணையையும் இனிய ஓசையான சுரமண்டலத்தையும் எடுத்து, சங்கீதம் பாடுங்கள். மாதப்பிறப்பிலும், நியமித்த காலத்திலும், நம்முடைய பண்டிகைநாட்களிலும், எக்காளம் ஊதுங்கள். இது இஸ்ரவேலுக்குப் பிரமாணமும், யாக்கோபின் தேவன் விதித்த நியாயமுமாயிருக்கிறது" (சங். 81:1–4).

இந்தத் துதியைப் பரம்பரையாகக் கற்றுக்கொடுக்கும்படி கர்த்தர் கட்டளையிட்டிருக்கிறாரே. எல்லா வயதினரும் கர்த்தரைத்

துதிக்க வேண்டுமென்பது தேவ கட்டளை. "பூமியின் ராஜாக்களே, சகல ஜனங்களே, பிரபுக்களே, பூமியிலுள்ள சகல நியாயாதிபதிகளே, வாலிபரே, கன்னிகைகளே, முதிர்வயதுள்ள வர்களே, பிள்ளைகளே, கர்த்தரைத் துதியுங்கள்" (சங். 148:11,12).

சகல வாத்தியங்களையும்கொண்டு துதிக்கவேண்டும் என்பது கர்த்தருடைய கட்டளை என்று உணர்ந்து அதை நிறைவேற்றிய பின்னரல்லவோ எழுப்புதல் உண்டாயிற்று!

"அவன், தாவீதும், ராஜாவின் ஞானதிருஷ்டிக்காரனாகிய காத்தும், தீர்க்கதரிசியாகிய நாத்தானும் கற்பித்தபடியே, கைத்தாளங் களையும் தம்புருகளையும் சுரமண்டலங்களையும் வாசிக்கிற லேவியரைக் கர்த்தருடைய ஆலயத்திலே நிறுத்தினான்; இப்படிச் செய்யவேண்டும் என்கிற கற்பனை கர்த்தரால் அவருடைய தீர்க்க தரிசிகளைக்கொண்டு உண்டாயிருந்தது" (II நாளா. 29:25).

எல்லா நிலைமைகளிலும் ஸ்தோத்திரம் செய்வது நம்மைக் குறித்து உண்டான தேவசித்தம் ஆகும். மேலும் இது பழைய ஏற்பாட்டு உபதேசமல்ல. புதிய ஏற்பாட்டு விசுவாசிகளும் இந்த தேவசித்தத்தை நிறைவேற்றவேண்டும் என்பதனைப் பின்வரும் வசனங்கள் வலியுறுத்துகின்றன.

"...நாங்கள் உங்களைக்குறித்து எப்பொழுதும் தேவனை ஸ்தோத்திரிக்கக் கடனாளிகளாயிருக்கிறோம்" (II தெச. 2:13).

எப்போதும் எல்லாவற்றிலேயும் ஸ்தோத்திரம் செய்யாவிட்டால் நன்றிகெட்ட மக்கள் ஆவோமே! தேவ சித்தத்தை அறிவதற்கு நன்றியுள்ள இருதயம் தேவை.

"ஆகையால், நீங்கள் மதியற்றவர்களாயிராமல், கர்த்த ருடைய சித்தம் இன்னதென்று உணர்ந்துகொள்ளுங்கள். ...ஆவியினால் நிறைந்து; சங்கீதங்களினாலும் கீர்த்தனை களினாலும் ஞானப்பாட்டுகளினாலும் ஒருவருக்கொருவர் புத்தி சொல்லிக்கொண்டு, உங்கள் இருதயத்தில் கர்த்தரைப்பாடிக் கீர்த்தனம்பண்ணி, நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின்

நாமத்தினாலே எப்பொழுதும் எல்லாவற்றிற்காகவும் பிதாவாகிய தேவனை ஸ்தோத்திரித்து..." (எபேசியர் 5:17-20).

தேவ சித்தம் செய்யாவிட்டால் பரலோகத்தில் பிரவேசிக்க முடியுமா?

"பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் சித்தத்தின்படி செய் கிறவனே பரலோகராஜ்யத்தில் பிரவேசிப்பானேயல்லாமல், என்னை நோக்கி: கர்த்தாவே! கர்த்தாவே! என்று சொல்லுகிறவன் அதில் பிரவேசிப்பதில்லை" (மத். 7:21).

இப்படியிருக்க, ஒருவன் தேவனைத் துதிக்காவிட்டால், அவன் தேவனை மதியாதவன், மறுதலிக்கிறவன், தேவனில்லா ஆலயத்தை உடையவன், ஆராதிக்க அறியாதவன், வீணன், தேவ கட்டளையை மீறினவன், ஆலோசனையை அலட்சியம் செய்தவன், தேவசித்தம் செய்யாதவனே!

நானாகவே இதைக் கூறவில்லை. நமது கையிலுள்ள வேதம்தான் இதையெல்லாம் சொல்கிறது. அப்படிப்பட்டவனுடைய முடிவு என்ன? என்பதை நீங்களே நிதானித்துக்கொள்ளுங்கள்.

மேல்நாட்டில் ஒரு சபையில் பக்தியும், தாழ்மையுமான ஒரு விசுவாசி தனது கிழிந்துபோன சப்பாத்தை (Boots) புதுப்பிக்க நிர்வாகமற்றவனாயிருந்தாலும், உள்ளத்தில் குன்றா எழுப்புதல் உள்ளவன். ஒரு எழுப்புதலான பிரசங்கம் கேட்டவுடனேயே அவனையறியாமலே, "Praise the Lord, கர்த்தருக்கு ஸ்தோத்திரம்" என்று கூக்குரலிடுவான்.

அச்சபையில் பெரிய எழுப்புதல் கூட்டம் நடந்தது. பெருமைமிக்க பிரசங்கியார் ஒருவர் வருகைதர இருந்தார். கூட்டம் நடக்கும்போது இடைமிடையே அத்தாழ்மையுள்ள விசுவாசி, "ஸ்தோத்திரம்" என்று சத்தமிட்டு, கூட்டத்தை அமைதியாக நடக்கவிடாது இடைஞ்சலாயிருப்பானே என்று பலரது ஆலோசனையின்பேரில் ஒரு தனவந்தர், அந்த ஏழை விசுவாசியைக் கூப்பிட்டு, "கூட்டம் முடியும்வரை உன்

சத்தத்தை எழுப்பாதிருந்தால் உனக்கு ஒரு ஜோடு புதிய சப்பாத்து தருவேன்" என்று கூறினான். அந்த ஏழையும் அதற்கு உடன்பட்டான்.

கூட்டம் ஆரம்பமாயிற்று. எழுப்புதலான பிரசங்கம்! அநேகரது உள்ளம் எழுப்புதல் அடைந்துகொண்டு இருந்தது. அவனது உதடுகளோ துடித்தன! உடனே தனவந்தனின் பக்கமாய்த் திரும்பினான். அவரோ தமது சப்பாத்துக் காலினால் சமிக்ஞை காட்டினார். "இன்று ஒரு நாள் மாத்திரம்! ஒரு ஜோடு புதிய சப்பாத்து!" உள்ளத்தை அமர்த்தினான். பிரசங்கமோ, ஒரே எழுப்புதல்! அவன் தன் இடத்தில் அமர்ந்திருக்க முடியாதவனாய் அசைவுகொண்டான். பின்புறமோ, சப்பாத்து ஒலி. பிரசங்கமோ, இன்னமும் அதிக எழுப்புதலாக இருக்கிறது. அவனால் அடக்கவே முடியவில்லை. உள்ளம் வெடித்தது. வாய் கட்டு மீறியது! "I don't want boots! Praise the Lord — எனக்கு சப்பாத்து வேண்டாம்! கர்த்தருக்கு ஸ்தோத்திரம்!" என்று உரத்தகுரலில் கூறினான். உள்ளம் எழுப்புதல் அடைந்தால் வாய்க்குப் பூட்டுப் போட யாரால் முடியும்? "கர்த்தரைத் துதிக்க வேண்டும்" என்ற கட்டளை வேதபுத்தகத்தில் இருப்பது உண்மைதான். ஆனால் கர்த்தர் இலவசமாகக் கொடுத்துள்ள இரட்சிப்பையும் நித்திய ஜீவனின் மகிமையையும் உணர்ந்தவர்கள் தேவனைத் தாமாகவே துதிப்பார்கள்.

துதிப்பதில் சந்தேகமா?

இதுவரை பக்தியுடனும் கருத்துடனும் வாசித்துவந்தவர்களுக்கு அநேகமாக எல்லாச் சந்தேகங்களும் நிவர்த்தியாகியிருக்கலாம். எனினும் ஒரு சிலருக்கு இன்னமும் சந்தேகம் உள்ளத்தே உறைந்திருக்கலாம். "தேவன் சத்தத்தைக் கேட்கிறாரோ?" இந்தக் கேள்வியைக் குறித்து நான் ஆச்சரியப்படுவதற்கில்லை. ஏனென்றால் இது ஒரு புதிய கேள்வி அல்ல. மிகப்பழைய கேள்விதான். இக்கேள்விக்குப் பதில் அளிப்பதற்குமுன் தேவனுடைய சத்தம் எப்படிப்பட்டது? என்பதை நாம் அறிந்து கொள்ளுதல் மிக அவசியம்.

தேவனுடைய சத்தம் எப்படிப்பட்டது? என்று நம் முன்னோர்களைக் கேட்டுப்பார்ப்போம். இஸ்ரவேலரைக் கேட்டால், "ஓ! அது மிகவும் பயங்கரமான தொனி; அவர் அதிகம் பேசியிருந்தால் நாங்கள் செத்தே போயிருப்போம் என்பார்கள். என்றாலும் மோசேயைக் கேட்டுப் பாருங்கள்" என்பார்கள். (யாத். 21:19) மோசே, "வர வர அதிகமாய்த் தொனிக்கிற எக்காள சத்தத்தினூடே அவர் சத்தம் எப்படிப்பட்டதென்று நீங்களே தீர்மானித்துக்கொள்ளுங்கள்" என்பார் (யாத். 19:19).

நமது துதிப்பிரியன் தாவீதரசனைக் கேட்டுப்பார்த்தால்,

"கர்தருடைய சத்தம் தண்ணீர்களின்மேல் தொனிக்கிறது; மகிமையுள்ள தேவன் முழங்குகிறார்;...

கர்த்தருடைய சத்தம் வல்லமையுள்ளது; கர்த்தருடைய சத்தம் மகத்துவமுள்ளது.

கர்த்தருடைய சத்தம் கேதுரு மரங்களை முறிக்கிறது;... கர்த்தருடைய சத்தம் அக்கினி ஜுவாலையைப் பிளக்கும். கர்த்தருடைய சத்தம் வனாந்தரத்தை அதிரப்பண்ணும்; ...கர்த்தருடைய சத்தம் பெண் மான்களை ஈனும்படி செய்யும்..." (சங். 29:3–9) என்பார்.

அதிரப்பண்ணுகிறதும். வல்லமையான காரியங்களைச் சாதிக்கிறதுமான தொனியையுடைய முழக்கம் அது! என்று சங்கீதக்காரன் கூறுகின்றான்.

எசேக்கியேல் தீர்க்கதரிசியோ, "பெரிய ஆரவாரமான சத்தம்" (எசே. 1:24; 43:2) என்பார். பெரிய வெளிப்படுத்தலைப்பெற்ற யோவானோ, "எக்காளம் போலவும், (வெளி. 1:10) பெரு வெள்ளத்து இரைச்சல் போலவும்" இருந்தது (வெளி. 1:15) என்று சொல்லுவார்.

இயேசு, தமது சீஷர்களில் இருவருக்குக் கொடுத்த பெயரைப் பாருங்கள். "இடி முழக்கத்தின் பிள்ளைகள்" (மாற்கு 3:17).

பிதா அப்படியானால், குமாரனாகிய இயேசுவின் சீஷரும் அப்படியே இருந்தார்கள் என்பதற்கு இது ஓர் நல்ல எடுத்துக் காட்டு. துதியின் ஒலியைக் கேட்கமுடியாத காதுகளையுடைய விசுவாசிகள் இந்தக் காதுகளுடன் பரலோகம் சென்றால், காதை அடைத்துக்கொண்டே இருக்கவேண்டும். ஒரு தூதனுடைய சத்தம் சிங்கம் கெர்ச்சிப்பதுபோல் ஆர்ப்பரிக்க, ஏழு இடிகளும் முழங்கினவாம். (வெளி. 10:3) தேவன் இருக்கிற இடமானால் ஒரே ஆர்ப்பரிப்பும், சத்தமும், முழக்கமுமேதான் காணப்படும். அதனால்தான் அந்தத் தேவனுடைய பிள்ளைகள் அவருடைய சமுகத்தில் கூடும்போது மகிழ்ச்சியில் ஆரவாரம் செய்கின்றனர். துதிக்கும் சத்தத்தைக் கேட்கப்பண்ணுங்கள். (சங். 66:8 ; ஏசாயா 24: 14–16) என்பது தேவ கட்டளை.

"தேவன் சத்தத்தை விரும்புகிறாரா?" என்பது ஒரு கேள்வி. இதற்கு நான் உத்தரவு கொடுக்கத் தேவையில்லை.

இயேசு தாமே இதற்குப் பதில் கொடுத்திருக்கிறார். இயேசு ஒரு முறை மறியின்மேல் பவனி வந்தார். அவருக்கு முன்னும் பின்னும் சென்ற ஒரு பெருங்கூட்ட மக்கள், "ஓசன்னா" என்று ஆர்ப்பரித்தனர். அந்தக் கூட்டத்தார் யார்? ஒருகாலத்தில் குருடராயும், செவிடராயும், ஊமையராயும் இருந்து பிச்சையெடுத்த பிச்சைக்காரர்களும், பெரியவர்கள் எனக்கருதப்பட்ட வேதபாரகர் பரிசேயர்களால் புறக்கணிக்கப்பட்டவர்களும், ஆயக்காரரும், பாவிகளும்தான் அந்தக் கூட்டத்தில் இருந்திருக்கவேண்டும்.

சரியாக நிதானிக்கும் கண்களால் நோக்கின், "அறிவில் குறைந்தவர்களும், பிச்சைக்காரர்களும், பிள்ளைகளும்தான்" முதலாம் குருத்தோலை ஞாயிறன்று, "ஓசன்னா, கர்த்தருடைய நாமத்தில் வருகிறவர் ஸ்தோத்திரிக்கப்படத்தக்கவர்" என்று ஆர்ப்பரித்தார்கள். இந்த நாட்களில் நம் பாடல்களில் காணப்படுவது போல இராகமும் ஒழுங்கும் அன்று பாடப்பட்ட பாடலில் இல்லாமல் இருந்திருக்கலாம் (மத். 21:9). ஆசாரியரின் அனுமதியில்லாமல், வேதபாரகரிடம் ஆலோசனை கேளாமல், ஒழுங்கும், இனிமையும் இல்லாமல், தேவாலயத்திற்குள் புகுந்து (மத். 21:9) பிள்ளைகளின் ஆர்ப்பரிப்பின் மத்தியில் இயேசு இருந்தார். அந்தத் துதியை அவர் ஏற்றுக்கொண்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த வேதபாரகர்களும் இயேசுவுக்குத் துதிபாடிய கூட்டத்தை அதட்டியிருக்கலாம். ஆனால் அவர்கள் தங்கள் தலைவர்களுக்கு அடங்கவில்லை. பின்பு இயேசுவிடம் வந்து, "மேலான தத்துவங்களையும், கடுமையான கோட்பாடுகளையும் கண்டித்துப் பேசும் போதகரே, காட்டுமிராண்டித்தனமாக இவர்கள் சத்தமிடுகிறதைக் கேட்கிறீரோ?" என்று பொருள்படத்தக்கதாக "இவர்கள் சொல்லுகிறதைக் கேட்கிறீரோ?" என்று கேட்டார்கள் (மத். 21:16). அதற்கு இயேசு, "ஆம்! கேட்கிறேன்! என்று கூறி, "குழந்தைகளுடைய வாயினாலும் துதி உண்டாகும்படி செய்தீர் என்பதை நீங்கள் ஒருக்காலும் வாசிக்கவில்லையா" என்றொரு தீர்க்கதரிசனத்தையும் சுட்டிக்காட்டி அவர்கள் வெட்கமடையுமாறு செய்தார். (மத். 21:16)

அது மட்டுமா! அப்படியே உங்கள் அதிகாரத்தினால் அவர்களை அடக்கிப்போட்டாலும், இவர்கள் பேசாமலிருந்தால் இந்தக் கல்லுகளே கூப்பிடும் (லூக்கா 19:40) என்று ஒரு எச்சரிப்பையும் கொடுத்தார். இதே பதிலைத்தான் உங்களுக்கும் இன்று இயேசு தருகிறார்.

இங்ஙனமிருக்க, எல்லா சந்தேகத்தையும் நீக்கிவிட்டுத் துதியுங்கள்! உங்கள் சத்தத்தை உயர்த்தித் துதியுங்கள். நீங்கள் இத்துதித்தலுக்கு முன்வர சற்றுத் தாமதித்தீர்களானால், உங்கள் பார்வைக்குக் கல்லாய்த்தோன்றுகிறவர்களைத் தேவன் எழுப்பி, அவர்களைத் துதிக்கச்செய்வார். அதைக் கேட்டு அவர் ரசித்துக் கொண்டிருப்பார்! கிருபைக்கு முந்துங்கள்! இத் துதித்தலை உண்மையோடும், உள்ளுணர்வோடும் உரிமையோடும், உத்தமத்தோடும் உரத்த குரலோடும் மேற்கொள்ளுவீர்களாக! அதற்கு வேண்டிய கிருபையைத் தேவன்தாமே பொழிந்தருள்வாராக!

இயேசு துதித்தாரா? என்பது மற்றொரு கேள்வி. லாசருவின் கல்லறையருகே கூடிய சிறுகூட்டத்தார் துக்கித்தார்கள். அவர்கள் தேவனைத் துதிக்கக்கூடாத சூழ்நிலையில் இருந்தார்கள். ஒரு வேளை அந்த இடத்தில் மௌனமாக இருந்திருப்பார்கள். ஆனால் அந்த இடத்தில்தான் இயேசு தேவனைத் துதித்தார். "எப்படி அந்த இடத்தில் அவரால் துதிக்க முடிந்தது?" என்று நீங்கள் கேட்கலாம். இயேசுவின் கண்கள் பிதா செய்யப்போகும் அற்புதத்தைக் கண்டன. எனவேதான், "பிதாவே நீர் எனக்குச் செவிகொடுத்தபடியினால் உம்மை ஸ்தோத்திரிக்கிறேன்" என்று அங்குக் கூடியிருந்தவர்கள் கேட்கத்தக்கதாய், சத்தமாய் இயேசு கர்த்தரை ஸ்தோத்திரித்தார். அதன்பின், "லாசருவே வெளியேவா" என்று உரத்த சத்தமாய்க் கூப்பிட்டார். இது, "வெற்றியின் முழக்கம்" என்றுதான் கூறவேண்டும்.

இயேசு பல இடங்களில் தேவனைத் துதித்துப் பாடி இருக்கக்கூடும். ஆனால், "ஒரே ஒரு இடத்தில்தான் அவர் தம் சீஷரோடு சேர்ந்து பாடினார்" என்று வாசிக்கிறோம். அந்தப்

பாடல், "ஸ்தோத்திரப் பாடல்" என்று வேதாகமத்தில் எழுதப்பட்டிருக்கிறது. அவர் சிலுவைப்பாடுகளைச் சந்திக்கப் புறப்பட்டுச் சென்றபோதுதான் அந்தப் பாடல் பாடப்பட்டது. விசுவாசியே, நீ துக்கத்தையும் துயரத்தையும் சந்திக்கும்போது அவற்றைப் பார்த்து கண்ணீர் சிந்தாதே.

இயேசு அந்த வேதனையின் வேளையிலே தேவனுடைய இராஜ்ஜியத்தில் நவமான இரசத்தைப் பானம்பண்ணும் அந்த மகிமையின் நாளை விசுவாசக் கண்களால் நோக்கிப் பார்த்தார்; ஸ்தோத்திரப் பாடலைப் பாடினார். விசுவாசியே, எதிர்மறையான சூழ்நிலைகள் உன்னைச் சந்திக்கலாம். ஆனால் அவற்றைப் பாராதே. நீ உன் ஆவிக்குரிய கண்களால் துன்பத்திற்குப்பின் தோன்றும் மகிமையைப் பார்த்து, தேவனைத் துதிக்கக் கற்றுக் கொள்ளவேண்டும். கர்த்தரை நீ எக்காலத்திலும் ஸ்தோத்திரிக்க வேண்டும். எல்லாச் சூழ்நிலைகளிலும் அவரை நீ துதிக்க வேண்டும். ஆமென்.

ஞானஸ்நானத்தைக் குறித்துச் சந்தேகமா?

கிறிஸ்தவ மார்க்கத்தின் வாசலாகப் பெரும்பாலோரால் கருதப்படுவது, ஞானஸ்நானம் ஆகும். அது கிறிஸ்தவ மார்க் கத்தின் ஒரு சடங்காச்சாரம் என்று கருதப்படுவதும் உண்டு. ஞானஸ்நானம் கொடுக்கும் நாள், அநேகரால் பெயரிடும் பண்டிகையாகக் கொண்டாடப்படுகிறது. யாதொரு காரியமாகிலும், அதனுடைய முக்கியத்துவத்தை உணராத நிலைமையில் அது கையாளப்படுமானால், அதன்பாலுள்ள பக்தியும் பரிசுத்தமும் பறந்து போகும். எனவே, இந்த ஞானஸ்நானம் தோன்றிய விதத்தை அறிந்துகொள்ளுதல் மிகவும் முக்கியமானதாகும்.

'ஞானஸ்நானத்தின் ஆரம்பம்' என்றவுடனேயே 'யோவான் ஸ்நானன்' என்ற பெயர் நம் மனக்கண்முன் தோன்றும். இந்த யோவானை ஒரு சாதாரணமான பெரிய மனிதனாக மாத்திரம் கருதுவதற்கு நமது வேதம் இசைவதில்லை. அவன் தேவனால் அனுப்பப்பட்டவன் (யோவான் 1:6).

யோவானும் தன்னைப் பற்றிக் கூறும்போது, "என்னை அனுப்பினவர்" என்று சொல்லுகிறதினால் அவனை அனுப் பினவர், 'தேவன்' என்று அறிந்து கொள்கிறோம். இயேசுவின் வருகையைப்பற்றி எவ்விதம் தீர்க்கதரிசிகள் முன்னுரைத்தனரோ அவ்விதமாகவே, இந்த யோவானைப்பற்றியும் தீர்க்கதரிசனம் உண்டாயிருந்தது.

"*... கர்த்தரின் வாக்கு அதை உரைத்தது என்றும் வனாந் தரத்திலே கூப்பிடுகிற சத்தம் உண்டாயிற்று*" என்று ஏசாயா *40:5 இல் வாசிக்கிறோம்.*

"*கர்த்தருக்கு வழியை ஆயத்தப்படுத்துங்கள்; அவருக்குப் பாதைகளைச் செவ்வைபண்ணுங்கள் என்று வனாந்தரத்திலே கூப்பிடுகிறவனுடைய சத்தம் உண்டென்று, ஏசாயா தீர்க்க தரிசியினால் சொல்லப்பட்டவன் இவனே*" (*மத். 3:3*) என தீர்க்க தரிசனத்தின் நினைவுகூருதலைப் பரிசுத்த ஆவியானவர் சுட்டிக் காட்டுகிறார்.

மேலும் இவன் இயேசுவுக்குமுன் அனுப்பப்பட்ட தூதன். "*இதோ, நான் என் தூதனை உமக்கு முன்பாக அனுப்புகிறேன், அவன் உமக்கு முன்னே போய், உமக்கு வழியை ஆயத்தம் பண்ணு வான்...*" என்று கூறப்பட்டுள்ளது (*மாற்கு 1:2*), இந்த யோவானுக்கு முன்பு உண்டாயிருந்த தீர்க்கதரிசிகள் யாரைக் குறித்தும் இவ் விதமாய் முன்னுரைக்கப்படவில்லை. ஆகையால், இவன் எல்லா தீர்க்கதரிசிகளைக் காட்டிலும் மேன்மையுள்ளவனே. இதை இயேசு தாமே சொல்லியிருக்கிறார்: "*... எதைப்பார்க்கப் போனீர்கள்? தீர்க்க தரிசியையோ? ஆம், தீர்க்கதரிசியைப் பார்க்கிலும் மேன்மையுள்ள வனையே என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்*" (*லூக்கா 7:26*).

இவன் இயேசுவுக்கு அடுத்து நிற்கத் தகுதியுள்ளவன். அவருக்குத் தோழன். "*... மணவாளனுடைய தோழனோ, அருகே நின்று, அவருடைய சொல்லைக் கேட்கிறவனாய் மணவாள னுடைய சத்தத்தைக்குறித்து மிகவும் சந்தோஷப்படுகிறான்; இந்தச் சந்தோஷம் இப்பொழுது எனக்குச் சம்பூரணமாயிற்று*" (*யோவான் 3:29*). இயேசு தாமே இவனிடம் தம்மைத் தாழ்த்தி, ஞானஸ்நானம் பெற்றார். "*அப்பொழுது யோவானால் ஞானஸ் நானம் பெறுவதற்கு இயேசு கலிலேயாவைவிட்டு யோர்தானுக்கு அருகே அவனிடத்தில் வந்தார். ... இயேசு அவனுக்குப் பிரதியுத் தரமாக: இப்பொழுது இடங்கொடு, இப்படி எல்லா நீதியையும் நிறைவேற்றுவது நமக்கு ஏற்றதாயிருக்கிறது என்றார். அப்பொழுது அவருக்கு இடங்கொடுத்தான். இயேசு ஞானஸ் நானம் பெற்றார்...*" (*மத். 3:13–16*). சிருஷ்டி கர்த்தாவாகிய இயேசு தாமே தாம் சிருஷ்டித்தவனிடம் ஞானஸ்நானம் பெற்றாரென்றால் இந்த யோவானுடைய தெய்வீக மேன்மை ஒப்பிடப்பட

முடியாததொன்று. இயேசு தாமே இந்த யோவானைப்பற்றி, *"ஸ்தீரிகளிடத்திலே பிறந்தவர்களில் யோவான்ஸ்நானனைப் பார்க்கிலும் பெரிய தீர்க்கதரிசி ஒருவனுமில்லை" (லூக்கா 7:28)* என்று சாட்சி கொடுத்தார்.

தீர்க்கதரிசிகள் எல்லோரைப் பார்க்கிலும், இவன் தேவனால் முக்கியப்படுத்தப்பட்டவனானால், இப்பூமியில் நிறைவேற்றும்படி இவனுக்கு தேவன் கொடுத்த பணியும் முக்கியப்படுத்தப்பட்டதென்றுரைப்பதில் எந்தத் தவறும் இல்லை. அக்கால ஜனங்கள் யோவானைத் தீர்க்கதரிசி என்று எண்ணினார்கள் (லூக்கா 20:6). "நமது வேதத்தில் சொல்லப்படவில்லையே," என்று ஆராய்ந்தறிந்த பரிசேயரும் சதுசேயரும்கூட அவனிடத்தில் ஞானஸ்நானம் பெற வந்தார்கள். *"பரிசேயரிலும் சதுசேயரிலும் அநேகர் தன்னிடத்தில் ஞானஸ்நானம் பெறும்படி வருகிறதை..." (மத். 3:7)* யோவான் கண்டான். எனவே அந்த ஞானஸ்நானம் எவ்வளவு பக்தியாய்க் கணிக்கப்பட்டிருந்தது என்பதை ஊகித்துக் கொள்ளலாம்.

இயேசு உலகத்தில் அவதரிக்கவேண்டுமென்ற தீர்மானம் உலகத் தோற்றத்திற்கு முன்பே குறிக்கப்பட்டது. *"அவர் உலகத்தோற்றத்திற்கு முன்னே குறிக்கப்பட்டவராயிருந்து, தமது மூலமாய்த் தேவன்மேல் விசுவாசமாயிருக்கிற உங்களுக்காக இந்தக் கடைசிக் காலங்களில் வெளிப்பட்டார்" (I பேதுரு 1:20).* அப்படியானால் இயேசுவுக்குமுன் ஒருவன் பிறக்கவேண்டும்; அவன் இன்னின்ன காரியங்களைச் செய்யவேண்டுமென்ற தீர்மானமும் உண்டாயிருக்கவேண்டும். ஆகவே, இந்த ஞானஸ்நானமானது தேவ சமுகத்தில் தோன்றி பிதா, குமாரன், பரிசுத்த ஆவியால், அங்கீகரிக்கப்பட்ட ஒரு புனித ஆலோசனையாகும். *"பரிசேயரும் நியாயசாஸ்திரிகளுமோ அவனாலே ஞானஸ்நானம் பெறாமல் தங்களுக்குக் கேடுண்டாகத் தேவனுடைய ஆலோசனையைத் தள்ளிவிட்டார்கள்" (லூக்கா 7:30).* இதனாலேயே இந்த ஞானஸ்நானம், "தேவனுடைய ஆலோசனை" என்று வேதாகமம் சுட்டிக் காட்டுகின்றது.

இந்த "தேவ ஆலோசனையாகிய" ஞானஸ்நானத்தைக் கொடுக்கும்படி, யோவானுக்குத் "தேவனால்" கட்டளையிடப்பட்டது. அதென்னவென்றால், "என்னை ஞானஸ்நானம் கொடுக்கும்படி அனுப்பினவர்" (யோவான். 1:33) என்று யோவான் சொல்லுகிறார். ஆகவே, இந்த ஞானஸ்நானமானது பிதா, குமாரன், பரிசுத்த ஆவியாகிய திரித்துவ தேவனின் கட்டளையானபடியாலேயே இதை, "...பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்திலே கொடுக்கும்படி" இயேசு கட்டளையிட்டார். (மத்தேயு 28:19ஐப் பார்க்க)

திரித்துவத்தின் 'ஆலோசனை' அல்லது கட்டளையாக இந்த ஞானஸ்நானம் இருப்பது ஏன்? ஒரு மனிதன் பூரணப்பட, பிதா, குமாரன், பரிசுத்த ஆவி ஆகிய மூவரும் அவனுக்குள் வந்து பாதைகளைச் செவ்வைப்படுத்துவதே இம்முன் தூதனுடைய நோக்கம். (லூக்கா 3:3) இந்த ஞானஸ்நானம் இப்பணியை நிறைவேற்றி, மனிதனில் திரியேக தேவன் தம் கிரியைகளைப்புரிய ஏதுவுண்டாக்குகிறது. இதனை இயேசு ஞானஸ்நானம் எடுத்தபோது நடந்த சம்பவங்களின் வாயிலாகத் தெளிவாக அறியலாம்.

"இயேசு ஞானஸ்நானம் பெற்று, ஜலத்திலிருந்து கரையேறினவுடனே, இதோ, வானம் அவருக்குத் திறக்கப்பட்டது; பரிசுத்த ஆவியானவர் ரூபங்கொண்டு புறாவைப்போல அவர்மேல் இறங்கினார். வானத்திலிருந்து ஒரு சத்தம் உண்டாகி: நீர் என்னுடைய நேசகுமாரன், உம்மில் பிரியமாயிருக்கிறேன் என்று உரைத்தது" (மத்தேயு 3:16,17). (லூக்கா 3:22)

இயேசு ஞானஸ்நானம் பெற்றதால் மனுஷரிலிருந்து பரலோகம்வரையுள்ள பாதை சரியாக்கப்பட்டது; அதாவது, இடையே அடைக்கப்பட்டிருந்த வானம் திறக்கப்பட்டது; பரிசுத்த ஆவி இறங்கினார்; தேவனும் சாட்சி கொடுத்தார். ஒருவருடைய நாமத்தில் ஒரு காரியத்தைச் செய்ய வேண்டுமானால், அக்காரியம், அன்னாரால் கட்டளையிடப்பட்டதாயிருக்கவேண்டும். திரித்து

வத்தின் நாமத்தில் ஒரு காரியத்தைச் செய்யும்போது, திரித்துவத்தின் சித்தத்திற்கும் கட்டளைக்கும் ஏற்றதாயிராவிட்டால், அந்தத் திரித்துவம் பயனற்றதாய்ப் போய்விடும். இவை எல்லாவற்றையும் சிந்தித்துப்பார்த்தால், ஞானஸ்நானத்தை சாதாரணமானதொன்றாய்க் கருதுவது ஏற்புடைத்தன்று.

இயேசு பரிசுத்த ஆவியினாலே ஞானஸ்நானம் கொடுக்கிறவர். *"...அவர் பரிசுத்த ஆவியினாலும் அக்கினியினாலும் உங்களுக்கு ஞானஸ்நானம் கொடுப்பார்" (மத். 3:11).* யோவானோ, ஜலத்தினாலே ஞானஸ்நானம் கொடுத்தவன். இப்பொழுது யார் யாரிடமிருந்து ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ள வேண்டும்? என்னிடம் கேட்டால், "யோவான்தான் இயேசுவிடம் ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ள வேண்டும்" என்பேன். நீங்களும் அப்படித்தான் சொல்லுவீர்கள்! நாம் மாத்திரம் என்ன? யோவானும் அப்படியே கூறினான். *"யோவானும் அவருக்குத் தடைசெய்து: நான் உம்மாலே ஞானஸ்நானம் பெறவேண்டியதாயிருக்க, நீர் என்னிடத்தில் வரலாமா என்றான்" (மத். 3:14).* ஆனாலும், இயேசுவோ, யோவானைச் சரிப்படுத்தி, அவனால் ஞானஸ்நானம் பெற்றார் (மத். 3:16). ஏன்? யோவான் இயேசுவைவிட வயதில் பெரியவனானபடியினாலேயா? அல்ல, அல்ல! ஞானஸ்நானம் பெரியதும், முக்கியமானதுமாயிருந்தபடியினாலேயே!!! திரித்துவ ஆலோசனையும் கட்டளையுமல்லவா அது! இயேசு ஞானஸ்நானத்தின் முக்கியத்தை வலியுறுத்தினார். பிதாவும், பரிசுத்த ஆவியும் அதனை அங்கீகரித்தார்கள்.

இயேசு அற்புத அடையாளங்களைச் செய்தார். அரிய உரைகள் நிகழ்த்தினார்; அதோடு நின்றுவிட்டாரா? தம்மை அண்டினோருக்குத் தம் சீஷர் மூலமாக ஞானஸ்நானமும் கொடுத்து வந்தார். *"அவர்கள் யோவானிடத்தில் வந்து: ரபீ, உம்முடனேகூட யோர்தானுக்கு அக்கரையில் ஒருவர் இருந்தாரே; அவரைக் குறித்து நீரும் சாட்சி கொடுத்தீரே, இதோ, அவர் ஞானஸ்நானங்கொடுக்கிறார், எல்லாரும் அவரிடத்தில் போகிறார்கள் என்றார்கள்" (யோவான் 3:26).*

சுவிசேஷப் பணியை இயேசு சீஷர்களின் தோள்மேல் சுமத்தும்போதும் ஞானஸ்நானத்தை முக்கியப்படுத்தினார். *"...நீங்கள் புறப்பட்டுப்போய், சகல ஜாதிகளையும் சீஷராக்கி, பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்திலே அவர்களுக்கு ஞானஸ்நானங்கொடுத்து, நான் உங்களுக்குக் கட்டளையிட்டயாவையும் அவர்கள் கைக்கொள்ளும்படி அவர்களுக்கு உபதேசம் பண்ணுங்கள். இதோ, உலகத்தின் முடிவுபரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனேகூட இருக்கிறேன் என்றார்" (மத். 28:19,20).*

இரட்சிக்கப்பட்ட சவுல், தேவனிடம், "நான் என்ன செய்ய சித்தமாயிருக்கிறீர்" என்று நேரடியாகக் கேட்டான். தேவ சித்தமோ அனனியா மூலமாக வந்தது. அனனியாவிடம் தேவன் சவுலைப் பற்றி, அவன் தேவ ஊழியத்தில் மிகமேன்மையுள்ளவன் (அப். 9:1–14,15,16) என்று அறிவித்தார். ஆகாரம் அருந்தாமல் மூன்று நாட்களாகக் காத்திருந்த சவுலுக்கு, அனனியா தேவசித்தத்தின்படி வெளிப்படுத்தும் முதற் கட்டளை, "நீ ஞானஸ்நானம் எடு" என்பதே.

"இப்பொழுது நீ தாமதிக்கிறதென்ன? நீ எழுந்து கர்த்தருடைய நாமத்தைத்தொழுதுகொண்டு, ஞானஸ்நானம் பெற்று, உன் பாவங்கள் போகக் கழுவப்படு என்றான்" (அப். 22:16). அனனியாவுக்கு ஞானஸ்நானம் அவ்வளவு முக்கியமானதாகக் காணப்பட்டது. சவுலும், தன் மேன்மையை எண்ணாமல், அனனியாவிடம் ஞானஸ்நானம் எடுத்தான். "...எழுந்திருந்து, ஞானஸ்நானம் பெற்றான்" (அப். 9:18). சவுலுக்கும் ஞானஸ்நானம் முக்கியமானதாகக் காணப்பட்டது.

செசரியாவிலே கொர்நேலியுவின் வீட்டில் பேதுரு பிரசங்கம் பண்ணுகையில் புறஜாதியினர் இரட்சிக்கப்பட்டு, ஆதியில் சீஷர்கள் பெற்றதுபோல் பரிசுத்த ஆவியும் பெற்றார்கள். "...வசனத்தைக் கேட்டவர்கள் யாவர்மேலும் பரிசுத்த ஆவியானவர் இறங்கினார். *...நம்மைப்போலப் பரிசுத்தஆவியைப் பெற்ற இவர்களும் ஞானஸ்*

நானம் பெறாதபடிக்கு எவனாகிலும் தண்ணீரை விலக்கலாமா என்று சொல்லி, கர்த்தருடைய நாமத்தினாலே அவர்களுக்கு ஞானஸ்நானங்கொடுக்கும்படி கட்டளையிட்டான்" (அப். 10:44, 47,48). தேவன் இவர்களை ஏற்றுக்கொண்டபடியினாலேதானே பரிசுத்த ஆவி அவர்களுக்குக் கிடைத்துவிட்டது. இனிமேல் தண்ணீர் ஞானஸ்நானம் எதற்கு? என்று சொல்லத்தோன்றுகிறது அல்லவா? அப்படி எண்ணி ஞானஸ்நானத்தை, "வெறும் தண்ணீர்தானே" என்று எந்தக் காரணத்தைக்கொண்டும் தள்ளி விடக்கூடாது என்று கண்டித்தார், பேதுரு பிரசங்கியார். உடனே ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளும்படி கட்டளையிட்டார். ஞானஸ் நானத்தின் முக்கியத்தை பேதுரு நன்கு அறிந்திருந்தார்.

"ஆவியானவர்: நீ போய், அந்த இரதத்துடனே சேர்ந்து கொள் என்று பிலிப்புடனே சொன்னார்" (அப். 8:29). பிலிப்பு கந்தாகே மந்திரிக்கு அவன் வாசித்த வேதவாக்கியத்தை முன்னிட்டு இயேசுவைக்குறித்து அவனுக்குப் பிரசங்கித்தான். (அப். 8:35) இரட்சிக்கப்பட்ட அந்த மந்திரி ஞானஸ்நானம் கொடுக்கக் கோரினார். "அப்பொழுது மந்திரி: இதோ, தண்ணீர் இருக்கிறதே, நான் ஞானஸ்நானம் பெறுகிறதற்குத் தடையென்ன என்றான்" (அப். 8:36). "பிலிப்பும் மந்திரியும் ஆகிய இருவரும் தண்ணீரில் இறங்கினார்கள், பிலிப்பு அவனுக்கு ஞானஸ்நானங் கொடுத்தான்". இடமோ வனாந்தரம். சாட்சிக்கு ஒருவரும் இல்லை. ஞானஸ்நானம் முடிந்தது. உடனே கர்த்தருடைய ஆவி யானவர் பிலிப்பைக் கொண்டுபோய்விட்டார். (அப். 8:39)

"இரட்சிக்கப்பட்டால் போதாதா? ஞானஸ்நானம் அவ்வளவு அவசியமா?" என்று ஆவியானவரைக் கேட்டால், "ஞானஸ்நானம் மிகமுக்கியமானது என்ற காரணத்தினாலேயேதான், நான் பிலிப் புவை ஞானஸ்நானம் முடியும்வரை அங்கு வைத்திருந்தேன். அப்படியில்லாதிருந்தால் மந்திரி இரட்சிக்கப்பட்டதும், இரதத்திலி ருந்தே பிலிப்புவைக் கொண்டு போயிருப்பேனே" என்று சொல்லுவார்.

விசுவாசம் தேவையன்றோ?

"...கர்த்தராகிய இயேசுவை நீ உன் வாயினாலே அறிக்கை யிட்டு, தேவன் அவரை மரித்தோரிலிருந்து எழுப்பினாரென்று உன் இருதயத்திலே விசுவாசித்தால் இரட்சிக்கப்படுவாய்" (ரோமர் 10:9).

விசுவாசித்தால் இரட்சிப்பு என்று முற்றுப் பெறாமல்,

"விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான்..." என்று கூறப்பட்டுள்ளது. (மாற்கு 16:16) 'விசுவாசமுள்ளவனாயிருப்பின் ஞானஸ்நானம் எடுத்தால்தான் இரட்சிப்பு' என்று வேதம் இரட்சிப்பின் இரண்டாவது படியையும் காட்டுகிறது. இதைச் சொன்னவர் இயேசுதான். ஆகவே இரட்சிக்கப்பட்டவன் உடனடியாக நிறைவேற்றவேண்டிய கடமை ஞானஸ்நானம் ஆகும்.

"இயேசு பிரதியுத்தரமாக: ஒருவன் ஜலத்தினாலும் ஆவி யினாலும் பிறவாவிட்டால் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்க மாட்டான் என்று மெய்யாகவே மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன்" (யோவான் 35) என்றார்.

நிக்கொதேமுவை இயேசு, "நீ மறுபடியும் பிறக்கவேண்டும் என்றும், அடுத்து ஜலத்தினாலும் பிறக்கவேண்டும் (ஞானஸ் நானம் எடுக்க வேண்டும்) என்றும் கூறுகிறார்.

இயேசுவின் சீஷர்களும் இதே முறையில் கூறினர். பேதுருவின் முதல் பிரசங்கத்தில் இரட்சிக்கப்பட்ட மூவாயிரம் பேருக்கதிகமானவர்களும், "நாங்கள் என்ன செய்ய வேண்டும்?"

என்று கேட்டபோது, முதற் படியாகிய மனந்திரும்புதலையும்; மனந்திரும்பின பின்பு ஞானஸ்நானம் எடுத்தலாகிய இரண்டாவது படியையும் குறித்துப் பேசினார். *"பேதுரு அவர்களை நோக்கி: நீங்கள் மனந்திரும்பி, ஒவ்வொருவரும் பாவமன்னிப்புக்கென்று இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளுங்கள், ..." (அப். 2:38)* என்றார். உடனடியாக ஞானஸ் 'நானம் எடுப்பதே தேவனுடைய சித்தம்.

பவுலினால் இரட்சிக்கப்பட்ட சிறைச்சாலைக்காரன், *"மேலும் இராத்திரியில் அந்நேரத்திலேதானே ... அவனும் அவனுடையவர்கள் அனைவரும் உடனே ஞானஸ்நானம் பெற்றார்கள்" (அப். 16:33).* நேரமோ! – நடு நிசி – ஞானஸ்நானத்தை விடியும்வரைகூட தள்ளிப்போடவில்லை. "உடனே" ஞானஸ்நானம் எடுத்தனர். பவுலும் தன் பசியைக்கூட நினைக்கவில்லை. அந்த ஆராதனை முடிந்தபின்பே ஆகாரம் அவனுக்கு அருளப்பட்டது. ஏனென்றால் பவுலும் அங்ஙனமே இரட்சிக்கப்பட்டதும், எழுந்திருந்து ("உடனே" அப். 9:18) ஞானஸ்நானம் எடுத்தான், "பின்பு" (அப். 9:18,19) போஜனம் பண்ணினான்.

கந்தாகே மந்திரி இரட்சிக்கப்பட்ட அந்த இடத்தில்தானே பிலிப்பு, வனாந்தரம் என்றும் பாராமல், அந்த நேரத்தில்தானே, தனிமை என்றும் பாராமல் ஞானஸ்நானம் எடுக்க விரும்பின அவனுக்குப் பரிசுத்த ஆவியின் நடத்துதலினால் ஞானஸ்நானம் கொடுத்தார்.

இவற்றையெல்லாம் ஆராய்ந்து பார்த்தால், உண்மையாக இரட்சிக்கப்பட்ட ஒருவனை அடுத்தபடியாக, "ஞானஸ்நானம் எடு" என்று வற்புறுத்த அவசியமில்லை. அவன் தானாகவே எடுப்பான். காலதாமதம் செய்யமாட்டான். இரட்சிப்பு, உண்மை யானதென்றால், அவன் பெற்றுள்ள விசுவாசமும் உயிருள்ளது. உயிருள்ள விசுவாசம் கிரியையோடு விளங்கும். *"அப்படியே விசுவாசமும் கிரியைகளில்லாதிருந்தால் தன்னிலேதானே செத்ததாயிருக்கும்." (யாக். 2:17).*

விசுவாசித்தவன் கிறிஸ்துவுக்கென்று செய்யும் முதற்கிரியை ஞானஸ்நானமேயல்லாது வேறு ஏது? அதனாலேயே இயேசு சொல்லும்போது, "விசுவாசமுள்ளவனாகி" – வசனம் முடிவடைய வில்லை – "ஞானஸ்நானம் பெற்றவன்" – "அவன்" – "இரட்சிக்கப்படுவான்" என்றார். (மாற்கு 16:16)

இயேசு ஏறக்குறைய 30ஆவது வயதில் வீட்டைவிட்டு ஊழியத்திற்குப் புறப்பட்டார் அல்லவா? (லூக்கா 3:23). அந்தப் பூரண புருஷர் எல்லா விதத்திலும் தகுதியுடையவர்தானன்றோ! எனினும் ஞானஸ்நானம் எடுத்தபின்னரே, தாம் நிறைவேற்ற வேண்டிய ஊழியத்திற்கென தம்மைப் பக்குவப்படுத்தலானார். *"யோர்தான் நதியில் யோவானால் ஞானஸ்நானம் பெற்றார். ... உடனே ஆவியானவர் அவரை வனாந்தரத்திற்குப் போகும்படி ஏவினார்" (மாற்கு 1:10,12).* உபவாச ஜெபத்திற்கும் முன்னதாக, ஞானஸ்நானம் குறிக்கப்பட்டிருப்பதை இயேசு தம் ஜீவியத்தின் மூலம் சுட்டிக்காட்டுகிறார். இவ்வாறு ஞானஸ்நானத்தின் முக்கியத்துவத்தை உணராதவர்கள் தங்களை இயேசுவின் பின்னடியார் எனக் கூறிக்கொள்ளுதல் முறையாகுமா?

கையாளும் விதத்தில் சந்தேகமா?

ஞானஸ்நானத்தில் முதற்கோணல்

தேவன் ஒரு காரியத்தை மனிதனிடத்தில் ஒப்படைப் பாரானால், அதைக் கையாளும் விதத்தை அதிகத் திட்ட வட்டமாய் அவனுக்குப் போதித்து, அது அதிக ஜாக்கிரதையோடு நிறைவேற்றப்படுவதை எதிர்பார்ப்பார். நோவாவையும் அவன் குடும்பத்தையும் இரட்சிப்பதற்குத் தேவன் ஒரு திட்டம் தீட்டினார். அத்திட்டத்தை ஒப்படைக்க ஒரு மனிதனைத் தேடிப்பார்த்தார். நோவாதான் அதற்குப்பொருத்தமானவனாய் இருந்தான். ஏனெனில் *"நோவா தன் காலத்தில் இருந்தவர்களுக்குள்ளே நீதிமானும் உத்தமனுமாயிருந்தான்" (ஆதி. 6:9, ஆதி. 7:1).*

அத்திட்டத்தை அவனிடம் ஒப்படைக்கும்போது, மரத்தின் வகை, அளவுகள், தட்டுகள், அறைகள், ஜன்னல் இவைகளின் விபரங்களை மிகவும் விளக்கமாய்க் கூறினார். (ஆதி: 6:14,16). நோவாவோ அதிலே ஒன்றும் கூட்டவும் இல்லை; குறைக்கவும் இல்லை. அதனாலேயே தேவன் அவனிடம் அத்திட்டத்தை ஒப்படைத்தார். திட்டம் வெற்றியாயிற்று. காரணம் என்ன? அணு வளவும் பிசகாமல் அது கையாளப்பட்டதேயாம்!

மாட்டேன் என்று மறுத்தான் மோசே! (யாத். 4:13). அவனைத்தான் கண்டுகொண்டார் தேவன். ஏனென்றால், ஆசரிப்புக் கூடார வேலையில் அவனே ஏற்றவனாயிருந்தான். *"என் தாசனாகிய மோசேயோ, ...என் வீட்டில் எங்கும் அவன் உண்மையுள்ளவன்" (எண். 12:7)* என்றார். ஆசரிப்புக் கூடார நியமங்களை, அதிக விளக்கமாகக் கூறினார். *"நான் உனக்குக் காண்பிக்கும் வாசஸ்தலத்தின் மாதிரியின்படியும், அதினுடைய எல்லாத்தட்டுமுட்டுகளின் மாதிரியின்படியும் அதைச் செய்வீர்களாக" (யாத். 25:9).* மாதிரியைக் காண்பித்து, அதில் அணு வளவும் பிசகாமல் ஜாக்கிரதையாய்ச் செய்யும்படி எச்சரிக்கை செய்து கட்டளையிட்டார்.

"...மோசே கூடாரத்தை உண்டுபண்ணப் போகையில்: மலையிலே உனக்குக் காண்பிக்கப்பட்ட மாதிரியின்படியே நீ எல்லாவற்றையும் செய்ய எச்சரிக்கையாயிரு என்று தேவன் அவனுக்குக் கட்டளையிட்டார்" (எபி. 8:5).

"கர்த்தர் மோசேக்குக் கற்பித்தபடியெல்லாம் இஸ்ரவேல் புத்திரர் சகல வேலைகளையும் செய்தார்கள். மோசே அந்த வேலைகளையெல்லாம் பார்த்தான், கர்த்தர் கற்பித்தபடியே ஜனங்கள் அதைச் செய்திருந்தார்கள். மோசே அவர்களை ஆசீர்வதித்தான்" (யாத். 39:42,43).

அவன் ஒவ்வொரு காரியத்தையும், "கர்த்தர் கற்பித்தபடியே" செய்தான் என்பது யாத்திராகமம் 39ஆம், 40ஆம் அதிகாரங்களில் தெளிவுபடுத்தப்பட்டிருக்கிறது. ஆகவே தேவன் ஒரு திட்ட மிட்டாரென்றால், அதிக ஜாக்கிரதையோடு அதை நிறைவேற்றும் ஆட்களையே தேர்ந்தெடுக்கின்றார்.

அதைப்போலவே ஞானஸ்நானம் பரத்திலே திரித்துவ ஆலோசனையில் வகுக்கப்பட்ட திட்டம். அதன் முக்கியத் துவத்தை ஏற்கனவே கவனித்தோம். நோவாவிடம் ஒப்படைக்கப் பட்ட திட்டம், நோவாவையும் அவன் குடும்பத்தையும்மாத்திரம் இரட்சிப்பதற்கான திட்டம். கர்த்தர் நோவாவை நோக்கி: *"நீயும் உன் வீட்டார் அனைவரும் பேழைக்குள் பிரவேசியுங்கள்" (ஆதி. 7:1)* என்றார்.

மோசேயிடம் ஒப்படைக்கப்பட்ட திட்டம், ஒரு சிறு கூட்ட மாகிய இஸ்ரவேல் ஜனங்களுக்குமட்டும் உரியதான திட்டம் (யாத். 19:5,6). ஆனால் ஞானஸ்நானமோ, சர்வலோக

இரட்சிப்புக்காக வகுக்கப்பட்ட திட்டம். எனவே இது அதிக ஜாக்கிரதையோடு கைக்கொள்ளப்படவேண்டும்.

இத்திட்டததை நிறைவேற்றும்படி தெரிந்துகொள்ளப்பட்டவ னாகிய இந்த யோவானோவென்றால் ... அதற்கென்றே தேவனால் அனுப்பப்பட்டவன் (யோவான் 1:33). குடும்ப பாரமும் உலகக் கவலையுமற்ற இவனது பணி, ஞானஸ்நானம் மாத்திரமே. இவனுடைய பெயரே ஞானஸ்நானன் என்பதாகும்.

இவன் கொடுத்ததான ஞானஸ்நானத்தின்முறை தேவன் கற்பித்ததில் அணுவளவும் பிசகாதிருந்தது என்பதற்கு யாதொரு சந்தேகமும் இல்லை. அவன் எந்த முறையைக் கையாண்டான், என்பதை அறிந்துகொள்ளுதல் அதிக அவசியமல்லவா?

யோவான் ஜனங்களுக்கு ஞானஸ்நானம் நதியில் கொடுத்த தாகப் பார்க்கிறோம். "...*யோர்தான் நதியில் அவனால் ஞானஸ் நானம் பெற்றார்கள்" (மத். 3:6)* என வேதாகமத்தில் வாசிக் கின்றோம். இயேசுவும் நாசரேத்தூரிலிருந்து புறப்பட்டு வந்து, யோர்தான் நதியில் யோவானால் ஞானஸ்நானம் பெற்றார். "அந்த நாட்களில், இயேசு கலிலேயாவிலுள்ள நாசரேத்தூரிலிருந்து வந்து, யோர்தான் நதியில் யோவானால் ஞானஸ்நானம் பெற்றார்" (மாற்கு 1:9).

நதியில் நீர் மிகுந்த இடத்தில் இயேசுவுக்கு ஞானஸ்நானம் கொடுக்கப்பட்டதால்தான், "ஜலத்திலிருந்து கரையேறினார்." (மத். 3:16) என்கிற சொறறொடர் பயன்படுத்தப்பட்டுள்ளது. ஆகவே தண்ணீர் மிகுந்த இடங்களில் ஜனங்களை தண்ணீருக்குள் மூழ்க்கி ஞானஸ்நானம் கொடுத்தார்கள் என்பது தெளிவாகிற தல்லவா?

"தாம் அதைத் திருவசனத்தைக் கொண்டு தண்ணீர் முழுக்கினால் சுத்திகரித்து" (எபே. 5:26) என்று கூறப்பட்டுள்ள மையால் அது ஞானஸ்நானத்தையே குறிக்கின்றதென்று நாம் அறியலாம்.

ஏதோ சிறிதளவு தண்ணீரில் நிற்கவைத்துக்கொண்டு, தலையில் தண்ணீரைத் தெளித்திருப்பார் என்று சொல்லுவதற் கில்லை; யோவானும் இயேசுவும் "அயினோன்" என்னுமிடத்தில் ஞானஸ்நானம் கொடுத்துவந்தார்கள். ஏன் என்று தெரியுமா?

"...இயேசுவும் அவருடைய சீஷரும் யூதேயா தேசத்திற்கு வந்தார்கள்; அங்கே அவர் அவர்களோடே சஞ்சரித்து, ஞானஸ் நானங் கொடுத்துவந்தார்.

சாலிம் ஊருக்குச் சமீபமான அயினோன் என்னும் இடத்திலே தண்ணீர் மிகுதியாயிருந்தபடியினால், யோவானும் அங்கே ஞானஸ்நானங் கொடுத்துவந்தான்" (யோவான் 3:22,23).

அந்த இடத்தில் தண்ணீர் மிகுந்திருந்தபடியினாலே அந்த இடத்தை ஞானஸ்நானம் கொடுப்பதற்குத் தெரிந்தெடுத்தார்கள். தண்ணீர் அதிகமாய் இருந்தால்தானே, நன்றாக மூழ்க்கி ஸ்நானம் கொடுக்க முடியும்? ஞானஸ்நானமானது ஆழமான ஜலத்தில் மூழ்க்கிக் கொடுக்கப்பட்டது. இதுவே யோவானும், இயேசுவும், அவருடைய சீஷர்களும் கையாண்டு வந்தமுறை.

ஞானஸ்நானம் கொடுக்கும்போது, அறிந்தோ, அறியாமலோ, அல்லது கேலியாகவோ, சிலர் என்னிடம், "இதென்ன? இப்படி குளிப்பாட்டி எடுக்கிறார்களே" என்று கேட்பார்கள். "இது சரீர அழுக்கைப் போக்கும் குளிப்பாட்டல்ல; இது இவர்கள், தேவ னோடு செய்யும் ஒரு உடன்படிக்கை" என்று சொல்லுவேன். அப்போது, பழையகாலத்தைப்பற்றி ஒரு சிந்தனை என் உள்ளத்தில் தோன்றும்.

பேதுருவையும் அநேகர் இப்படித்தான் கேட்டிருப்பார்கள் போலும்! அதனால்தான் அவரும் ஞானஸ்நானத்தைப் பற்றிக கூறும்போது, *"அதற்கு ஒப்பனையான ஞானஸ்நானமானது, மாம்ச அழுக்கை நீக்குதலாயிராமல், தேவனைப்பற்றும் நல்மனச்சாட்சியின் உடன்படிக்கையாயிருந்து" (1 பேதுரு 3:21)* என்று கூறியிருக்கிறார். ஆகவே, ஞானஸ்நானமானது தண்ணீரில்

மூழ்க்கிக் கொடுக்கும் ஒரு ஸ்நானமாகும் என்ற உண்மை மிகத் தெளிவாக்கப்பட்டிருக்கிறது.

புறஜாதியாருக்கும் அவ்விதமே பேதுருவால் ஞானஸ்நானம் கொடுக்கப்பட்டது. கந்தாகே ராஜஸ்திரீயின் மந்திரி ஒரு எத்தியோப்பியன், ஞானஸ்நானம் கொடுத்தவன் பிலிப்பு. எப்படிக் கொடுத்தான் என்பதைக் கவனிப்போம். *"அப்பொழுது பிலிப்பும் மந்திரியும் ஆகிய இருவரும் தண்ணீரில் இறங்கினார்கள்; பிலிப்பு அவனுக்கு ஞானஸ்நானங்கொடுத்தான். அவர்கள் தண்ணீரிலிருந்து கரையேறினபொழுது, கர்த்தருடைய ஆவியானவர் பிலிப்பைக் கொண்டுபோய்விட்டார். மந்திரி அப்புறம் அவனைக் காணாமல், சந்தோஷத்தோடே தன் வழியே போனான்" (அப். 8:38,39).*

"கரையேறினார்கள்" (அப். 8:39). என்ற சொல் உபயோகிக்கப்பட்டிருப்பதால் ஞானஸ்நானம் தண்ணீரில் மிகுந்த இடத்தில்தான் கொடுக்கப்பட்டது என்பதை அறிந்துகொள்ளலாம். ஆவியானவரால் நடத்தப்பட்ட ஞானஸ்நானமே இது. "ஆவியைப் பெற்றுள்ளேன்" என்று சொல்லுகிறவன் இதை மறுக்கமாட்டான். அப்படி மறுத்தால் அவன் பெற்றிருக்கும் ஆவி பிலிப்புவை நடத்தின ஆவியாயிருக்கமுடியாது.

முதற்கண் ஞானஸ்நானம் துவக்கப்பட்ட காலத்தில், இக்காலத்தில் இருப்பதுபோல குழாய்களும் தண்ணீரும் கிடையாது. ஞானஸ்நானம் கொடுக்கப்பட தண்ணீர் மிகுந்த இடங்களிலேயே, ஜனங்கள் செல்லவேண்டியிருந்தது. உடல் அழுக்கைப் போக்குவதற்கு ஸ்நானம். உள்ள அழுக்கைப் போக்குவதற்கோ ஞானஸ்நானம் தேவை.

இந்த "ஞானஸ்நானம்" என்ற வார்த்தைக்கு சிறு பிள்ளைகள்கூட அர்த்தம் கூறமுடியும். ஆனாலும் சிறு பிள்ளைகளைப்போல மாறாத பெரியவர்களால் அதை அறிந்து கொள்ளமுடியாததை நோக்குமிடத்து வியப்பாகவே உள்ளது. *"நீங்கள் மனந்திரும்பிப் பிள்ளைகளைப்போல் ஆகாவிட்டால்,*

பரலோகராஜ்யத்தில் பிரவேசிக்கமாட்டீர்கள்..." (மத். 18:3). சிறுபிள்ளைகளைப்போல இச்சத்தியத்தை ஏற்றுக்கொள்ளாதவர்கள் பரலோக ராஜ்ஜியத்திற்குள் பிரவேசிக்கமாட்டார்கள்.

இதை நோக்குங்கால் தேவனால் ஒழுங்குப்படுத்தப்பட்டதும், நம் முன்னோர்களால் கைக்கொள்ளப்பட்டதுமான ஞானஸ்நானமானது நீரில் முழ்கி எடுப்பதேயாகும். நாசத்திற்கு நேராய், உலக சிற்றின்ப வெள்ளத்தால் அடித்துக்கொண்டுபோகப்படும் ஒருவன், விசுவாசக் கயிற்றைப் பிடித்து இரட்சிக்கப்பட்டு, கிறிஸ்துவுக்குள் கரையேறும் முதற்படியே இந்த ஞானஸ்நானம். இந்த முதற்படியே சரியில்லையானால்... மனிதன் எங்ஙனம் பரலோகம் செல்லமுடியும்?

இந்த ஞானஸ்நானம் தேவனால் திட்டமிடப்பட்டது; கிறிஸ்தவ மார்க்கத்தில் முக்கிய இடம் பெற்றது; மிகப் பெரிய தீர்க்கதரிசியால் (யோவான்) துவக்கப்பட்டது; மெய்யான தேவ மனிதனால் (இயேசு) முறை பிசகாமல் பின்பற்றப்பட்டது; நம் முன்னோர்களால் கனத்தோடு கைக்கொள்ளப்பட்டது; ஞானஸ்நானமே வேதம் புகட்டுவது; திருத்துவத்தால் அங்கீகரிக்கப்பட்டது; பரலோகத்தில் பிரவேசிக்கச் செய்யக்கூடியது.

உலகத்தில் கள்ள (Counter feit) நாணயங்களும் கள்ள நோட்டுகளும் உண்டு, ஆனால் அவை வங்கியில் (Bank) செல்லாது. அதுபோலவே கள்ள அப்போஸ்தலர்களும் உண்டு. *"அப்படிப்பட்டவர்கள் கள்ள அப்போஸ்தலர்கள். ...அப்போஸ்தலரின் வேஷத்தைத் தரித்துக்கொண்டவர்களாயிருக்கிறார்கள்" (II கொரி. 11:13).*

வேதத்திற்கு அப்பாற்பட்ட கள்ள ஞானஸ்நானங்களும் உண்டு. அவைகள் கள்ள அப்போஸ்தலர்களால் உண்டான கள்ள ஞானஸ்நானமேயல்லாது வேறு என்ன என்று கூறமுடியும்? சிலர் திறமையினால் கள்ள நோட்டுகளைப் பாங்கியில் செல்லவைத்து விடுவார்கள். பிடிபட்டால் சிறைவாசம் தான். ஆனால் தேவனை நாம் ஏமாற்ற முடியுமா? கள்ள ஞானஸ்நானம் தேவனுடைய ராஜ்யத்திற்குள் பிரவேசிக்கச் செய்யாது.

சுவிசேஷம் என்பது இதே முறையையுடைய ஞானஸ்நானததையே தன்னகத்தேகொண்டது. வேறொரு சுவிசேஷம் இல்லை. *"வேறொரு சுவிசேஷம் இல்லையே; சிலர் உங்களைக் கலகப்படுத்தி, கிறிஸ்துவினுடைய சுவிசேஷத்தைப் புரட்ட மனதாயிருக்கிறார்களேயல்லாமல் வேறல்ல" (கலா. 1:7)* என்று வேதம் திட்டமாகக் கூறுகிறது.

"ஒரே கர்த்தரும், ஒரே விசுவாசமும், ஒரே ஞானஸ்நானமும்" (எபே. 4:5) என்று வேதம் கூறுவதால் ஒரு முறைக்குமேல் ஞானஸ்நானம் எடுக்கவேண்டிய அவசியமே இல்லை. "விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான்" (மாற்கு 16:16).

"இயேசு பிரதியுத்தரமாக: ஒருவன் ஜலத்தினாலும் ஆவியினாலும் பிறவாவிட்டால் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்க மாட்டான்" (யோவான் 3:5) என்று சொன்னார்.

இப்படி இரட்சிப்பைப் பரிசுத்தப்படுத்தி, பரலோக ராஜ்யத்தில் பிரவேசிக்கச் செய்ய சக்தியுள்ளது இந்த ஞானஸ்நானம்.

இஸ்ரவேல் ஜனங்கள் தண்ணீரில்லாது தவித்தபோது, அவர்கள் தலைவனான மோசே கர்த்தரை நோக்கி முறையிட்டான். கர்த்தரோ, "ஜனங்களைக் கூடிவரச்செய்து கன்மலையைப் பார்த்துப் பேசுங்கள், அப்பொழுது தண்ணீர் புறப்பட்டுவரும்" என்றார்.

விசுவாசமில்லாத மோசேயோ கன்மலையைத் தன் கோலினால் அடித்தான். எனினும் தண்ணீர் புறப்பட்டுவந்தது. (எண்ணாகமம் 20:7–12) மோசே ஜனங்களுக்குமுன் கர்த்தரது கட்டளையைக் கைக்கொள்ளாததினால் கானான் தேசத்தில் அவன் பிரவேசிக்கமுடியவில்லை. (உபாகமம் 3:25,27)

அங்ஙனமே ஞானஸ்நானத்திற்குரிய முறைமையின்படி அதைக் கைக்கொள்ளாவிடின், நீங்கள் பரலோக ராஜ்ஜியத்தில் பிரவேசிக்கமுடியுமா? முடியாது!

"அதற்கு ஒப்பனையான ஞானஸ்நானமானது... தேவனைப் பற்றும் நல்மனச்சாட்சியின் உடன்படிக்கையாயிருக்கிறது" (I பேதுரு 3:21).

இங்கு ஞானஸ்நானம் 'உடன்படிக்கைக்கு' ஒப்பிடப்பட்டிருக்கிறது. உடன்படிக்கைப்பெட்டியில் உள்ள பொருட்களைப் பார்க்கக்கூட முடியாது. தொடவுங்கூடாது. (எண். 4:15, 20)

சத்துருக்களால் கைப்பற்றப்பட்ட உடன்படிக்கைப்பெட்டி, திரும்ப இஸ்ரவேல் தேசத்திற்குள் கொண்டுவரப்பட்டது. மாடுகள் மிரண்டு பெட்டியை அசைத்தபடியினால், அப்பணியில் உற்சாகமாய் ஈடுபட்டிருந்த ஊசாவுக்கு, தேவனுடைய உடன்படிக்கைப் பெட்டியைக் கீழே விழவிட மனம் வராது, கையை நீட்டி, பெட்டியைக் கீழே விழாமல் பிடித்தான் (II சாமு. 6:7,8). கர்த்தர் அவனை அடித்தார். அந்த இடத்தில்தானே அவன் செத்தான். இப்படியிருக்க, ஞானஸ்நானமாகிய உடன்படிக்கையில் கையிட்டு முறைகளை மாற்றுபவன், தேவனுடைய ராஜ்யத்தில் ஜீவித்திருக்க முடியுமா? எனவே, தேவ ஞானத்தை மாற்ற முயலாதே! அவர் கட்டளைக்குக் கீழ்ப்படி! அதனால் வரும் ஆசீர்வாதங்களை நீ நிறைவாய் அநுபவிப்பாய். அல்லேலூயா!

தசமபாகங்களைக் குறித்துச் சந்தேகமா?

“மனிதன் தேவனை வஞ்சிக்கலாமா? நீங்களோ என்னை வஞ்சிக்கிறீர்கள். எதிலே உம்மை வஞ்சித்தோம் என்கிறீர்கள்? தசமபாகத்திலும் காணிக்கைகளிலுந்தானே” (மல்கியா 3:8).

நான் இன்று தசமபாகங்கள், காணிக்கைகள் ஆகியவை களைக் குறித்து உங்களுடன் பேசவிரும்புகின்றேன். ஆங்கில மொழியாக்கத்தில் இந்த வேதவாக்கியமானது, “மனிதன் தேவனைக் கொள்ளையிடலாமா? நீங்களோ என்னைக் கொள்ளை யிடுகிறீர்கள். எதிலே உம்மைக் கொள்ளையிட்டோம் என்கிறீர்கள்? தசமபாகத்திலும் காணிக்கைகளிலுந்தானே” என்று மிகவும் கடுமையாய்க் கண்டித்துணர்த்துகின்றது.

இப்பொருள் குறித்து விசுவாசிகளிடையே ஒரு தவறான எண்ணம் பரவலாகக் காணப்படுவதால், இதனைக்குறித்துள்ள மெய்யான விளக்கம் அவர்களுக்குப் பேராசீர்வாதமாக இருக்கு மென்னும் நோக்கத்துடன் நான் இன்று இப்பொருள் குறித்துப் பேசவேண்டியதாயிருக்கின்றது.

தசமபாகங்கள்! நம்முடைய பொருள் வருவாயில் பத்தில் ஒரு பாகம் என்பது இதன் பொருளாகும். நம்முடைய வரு மானத்தில் பத்தில் ஒரு பாகம் தேவனுக்கு உரியது. ஆகவே தேவனுடைய பிள்ளைகள் தங்கள் வருமானத்தில் பத்தில் ஒரு பாகத்தைத் தேவனுக்குச் செலுத்தும்படி எதிர்பார்க்கப்படுகின்றனர். தேவனுடைய பிள்ளைகள் என்று சொல்லுமிடத்து, தேவ ஊழியர்களும் அதில் அடங்குவார்கள். நானும் தசமபாகம் செலுத்துகிறேன்.

இது ஒரு பிரசங்கமோ, செய்தியோ அன்று; ஒரு வேதபாட மாயிருக்கின்றது. ஆகவே மிகவும் கவனமாக இப்பாடத்தை நாம் கற்றுக்கொள்வோமாக!

இந்த வேதபாடத்தைக் கீழ்க்காணும் சிறு தலைப்புகளின்கீழ் ஆராய்வது நலமாகும். இவைகள் முறையே:

1. தசமபாகங்கள் குறித்துப் பழைய, புதிய ஏற்பாடுகளிலுள்ள கட்டளையின் பயன்படுநிலை.
2. தசமபாகங்கள் குறித்துள்ள அறிவிப்பு.
3. தசமபாகங்களின் ஆன்ற மதிப்பு.
4. தசமபாகங்களை எற்றுக்கொள்ளுதல்.
5. தசமபாகங்களின் மெய்யியல்பான ஆசீர்வாதங்கள்.
6. தசமபாகங்களின் ஆட்சிமுறை.
7. தசமபாகங்கள் குறித்துப் பதில் சொல்லும் பொறுப்புடைமை.

இந்த ஏழு சிறு தலைப்புகளையும் தனித்தனியே வேத வாக்கியங்களின் அடிப்படையில் ஆராய்ந்து அறிந்துகொள்ளு வதில் கர்த்தர்தாமே நமக்கு உதவியருள்வாராக.

தசமபாகங்கள் குறித்துப் பழைய, புதிய ஏற்பாடுகளிலுள்ள கட்டளையின் பயன்படுநிலை

மத்தேயு 23:23 வசனத்தை வாசிப்போமாக. “மாயக்காரராகிய வேதபாரகரே! பரிசேயரே! உங்களுக்கு ஐயோ, நீங்கள் ஒற்தலா மிலும் வெந்தையத்திலும், சீரகத்திலும் தசமபாகம் செலுத்தி, நியாயப்பிரமாணத்தில் கற்பித்திருக்கிற விசேஷித்தவைகளாகிய நீதியையும் இரக்கத்தையும் விசுவாசத்தையும் விட்டுவிட்டீர்கள். இவைகளையும் செய்யவேண்டும், அவைகளையும் விடாதிருக்க வேண்டும்.” இது நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் திருவாய்மொழி. தேவபக்தியின் வேடத்தைத் தரித்துக்கொண்டவர்

களாய் வஞ்சித்தொழுகும் வேதபாரகர்களையும் பரிசேயர்களையும் கண்டித்துணர்த்தும் இயேசு கிறிஸ்துவினுடைய கடிந்துரைதான் இது.

நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து அவர்களைக் குறித்தும், அவர்களுடைய வஞ்சகமான செயல்களைக்குறித்தும், குருடரான வழிகாட்டிகள் என்றும் வெள்ளையடிக்கப்பட்ட கல்லறைகள் என்றும் கண்டனம் பண்ணிக் கடிந்துரைக்கின்றார். இவ்வாறு கண்டனம் பண்ணிக் கடிந்துரைக்கும் நிலையில், நம்முடைய கர்த்தர் மத்தேயு 23:23 வசனத்தில் அவர்கள் – அதாவது வேதபாரகர்களும் பரிசேயரும் – தசமபாகம் செலுத்த வேண்டும்; அதேவேளையில் நியாயப்பிரமாணமானது கற்பித்து உணர்த்துகின்ற நீதி, இரக்கம், விசுவாசம் ஆகியவைகளையும் விட்டுவிடாதிருக்கவேண்டுமென்று அவர்களுக்கு அறிவுறுத்துகின்றார். தசமபாகங்களின் பயன்படுநிலையை - அதாவது தசமபாகங்களைக்குறித்துள்ள நம்முடைய கடமைப்பாட்டு நிலையை - நாம் மிகவும் தெளிவாக உணரலாகும். ஆகவே தசமபாகங்களைச் செலுத்துதலும், நியாயப்பிரமாணத்தில் கற்பித்திருக்கிற நீதியையும் இரக்கத்தையும் விசுவாசத்தையும் விட்டுவிடாதிருப்பதும் நாம் கைக்கொள்ளவேண்டிய இன்றியமையாத சமநிலைப் பிரமாணமும் கட்டளையுமாயிருக்கின்றது என்பது தெளிவு.

பழைய ஏற்பாட்டின் நியாயப்பிரமாணக்கட்டளைகளும், புதிய ஏற்பாட்டின் காலமாகிய இக்கிருபையின் காலத்தில் அவைகளுடைய ஏற்புடைமையும் பயன்படுநிலையுங்குறித்து நமக்கு ஒரு தெளிவான விளக்கம் வேண்டும். மரபுவழி வந்த நியாயப்பிரமாணக்கட்டளைகளாகிய ஏழாம் நாளாகிய பரிசுத்த ஓய்வுநாள், பண்டிகைகள், விருத்தசேதனம் முதலியன இன்று நமக்கு ஏற்புடையனவல்ல. ஏன்?

"விசுவாசிக்கிற எவனுக்கும் நீதி உண்டாகும்படியாகக் கிறிஸ்து நியாயப்பிரமாணத்தின் முடிவாயிருக்கிறார்" (ரோமர் 10:4).

"ஆகையால், போஜனத்தையும் பானத்தையும் குறித்தாவது, பண்டிகை நாளையும் மாதப்பிறப்பையும் ஓய்வு நாட்களையுங் குறித்தாவது, ஒருவனும் உங்களைக் குற்றப்படுத்தாதிருப்பானாக. அவைகள் வருங்காரியங்களுக்கு நிழலாயிருக்கிறது. அவைகளின் பொருள் கிறிஸ்துவைப்பற்றினது" (கொலோ. 2:16).

ஆனபடியால், பழைய ஏற்பாட்டின் பாரம்பரியமான கட்டளைகளாகிய இவைகளை நாம் கைக்கொள்ளவேண்டியதில்லை. இவைகளைக் குறித்து ஒருவனும் நம்மைக் குற்றப்படுத்த முடியாது. ஆயினும் மயிரைப்பின்னி, பொன்னாபரணங்களை அணிந்து, உயர்ந்த வஸ்திரங்களை உடுத்திக்கொள்ளுதலாகிய புறம்பான அலங்கரிப்பைக் குறித்துள்ள பழைய ஏற்பாட்டின் முறைமையைப் புதிய எற்பாட்டின் கிறிஸ்துவின் பிரமாணம் உதறி ஒதுக்கித் தள்ளுகின்றது. I பேதுரு 3:3–4; I தீமோத்தேயு 2:9–10 ஆகிய வேதவாக்கியங்களை நோக்குக.

தசமபாகங்களையும் காணிக்கைகளையுங் குறித்தோவெனில் பழைய, புதிய ஏற்பாடுகளின் நாட்களில் திருச்சபையும், அவைகள் முறைமை தவறாமல் கூடிவருதலும் இருந்தன என்பதனை நாம் அறிந்துகொள்ள வேண்டும். ஆகையால் புதிய ஏற்பாட்டின் காலமாகிய இந்நாட்களுக்குப் பொருந்தாது; நடைமுறைக்கு ஒவ்வாது என்று கொள்ளுதல் தவறாகும்.

உண்மையைச் சொல்லுவோமாயின், திருச்சபைக்கு அதன் விசுவாசிகள் செலுத்துகின்ற காணிக்கை நன்கொடை முதலியன தசமபாகங்களிலும் அதிகமாயிருந்தது. II கொரிந்தியர் 8:1–2 வசனங்களைப் பார்க்க. "அன்றியும் சகோதரரே, மக்கெதோனியா நாட்டுச் சபைகளுக்குத் தேவன் அளித்த கிருபையை உங்களுக்கு அறிவிக்கிறோம். அவர்கள் மிகுந்த உபத்திரவத்தினாலே சோதிக்கப்படுகையில், கொடிய தரித்திரமுடையவர்களாயிருந்தும், தங்கள் பரிபூரண சந்தோஷத்தினாலே மிகுந்த உதாரத்துவமாய்க் கொடுத்தார்கள்." மக்கெதோனியா சபைகளைக் குறித்துப் பரிசுத்த அப்போஸ்தலனாகிய பவுல் கொடுக்கும் சாட்சி இது.

இக்காரியங்குறித்து மேலும் திருமறை கூறுவதுதான் என்ன? அப்போஸ்தலர் 11:27–30 வசனங்களை நோக்குக. அக் காலத்தில் உலகமெங்கும் கொடிய பஞ்சம் உண்டாயிற்று அப்பொழுது அந்தியோகியாவிலுள்ள சீடர்கள் அவரவர் தங்கள் தங்கள் திராணிக்குத்தக்கதாக யூதேயாவில் குடியிருக்கிற சகோதர ருக்கு உதவியாகப் பணஞ்சேகரித்து அனுப்பவேண்டுமென்று தீர்மானித்தார்கள். அப்படியே அவர்கள் சேகரித்து பர்னபா, சவுல் என்பவர்களுடைய கையில் கொடுத்து, மூப்பரிடத்திற்கு அனுப்பினார்கள்.

வாரத்தின் கடைசி நாளாகிய பரிசுத்த ஓய்வு நாளின் நியாயப் பிரமாணத்தின் பாரம்பரிய அநுட்டானத்திற்கு ஏற்புடைய முக்கியத் துவமளிக்காத நம்முடைய கர்த்தராகிய இயேசு தசமபாகங் களுக்கும் காணிக்கைகளுக்கும் முக்கியத்தும் அளிக்கின்றார் என்பது இங்குக் குறிப்பிடத்தக்கது.

ஆகையால், தசமபாகங்களும் காணிக்கைகளும் புதிய ஏற்பாட்டின் காலமாகிய இக்கிருபையின் காலத்திலுள்ள நமக்குச் சாலவும் எற்புடையன என்பது தெளிவு.

தசமபாகங்களைக்குறித்துள்ள அறிவிப்பு

தசமபாகங்கள் குறித்துள்ள அறிவிப்பு என்னும் சொற் றொடரினால் நான் உங்களுக்குச் சொல்லுவது என்ன தெரியுமா? தசமபாகங்களைக் குறித்து நாம் வேதாகமத்தில் முதலாவது எங்கே காண்கின்றோம்?

ஆதியாகமம் 14:18–20 வசனங்களைப்பார்க்க. அங்கேதான் நாம் தசமபாகங்களைக் குறித்துள்ள முதலாவது அறிவிப்பினைக் காண்கின்றோம்.

“அன்றியும், உன்னதமான தேவனுடைய ஆசாரியனாயிருந்த சாலேமின் ராஜாவாகிய மெல்கிசேதேக்கு அப்பமும் திராட்சரசமும் கொண்டுவந்து, அவனை (ஆபிரகாமை) ஆசீர்வதித்து: வானத் தையும் பூமியையும் உடையவராகிய உன்னதமான தேவனுடைய

ஆசீர்வாதம் ஆபிரகாமுக்கு உண்டாவதாக. உன் சத்துருக்களை உன் கையில் ஒப்புக்கொடுத்த உன்னதமான தேவனுக்கு ஸ்தோத் திரம் என்று சொன்னான். இவனுக்கு ஆபிரகாம் எல்லாவற்றிலும் தசமபாகம் கொடுத்தான்”

சாலேமின் ராஜாவாகிய மெல்கிசேதேக்குக்கு ஆபிரகாம் தசம பாகம் கொடுத்தான் என்று நாம் முதலாவது வேதாகமத்தில் காண்கிறோம். மெல்கிசேதேக்கு உன்னதமான தேவனுக்கு ஆசாரியனாயிருந்தான்.

அடுத்தபடியாக ஆதியாகமம் 20–22 வேதவாக்கியங்களைப் பார்க்க.

“அப்பொழுது யாக்கோபு: தேவன் என்னோடு இருந்து, நான் போகிற இந்த வழியிலே என்னைக்காப்பாற்றி, உண்ண ஆகாரமும் உடுக்க வஸ்திரமும் எனக்குத் தந்து, என்னை என் தகப்பன் வீட்டுக்குச் சமாதானத்தோடே திரும்பிவரப்பண்ணுவா ரானால், கர்த்தர் எனக்குத் தேவனாயிருப்பார். நான் தூணாக நிறுத்தின இந்தக் கல் தேவனுக்கு வீடாகும்; தேவரீர் எனக்குத் தரும் எல்லாவற்றிலும் உமக்குத் தசமபாகம் செலுத்துவேன் என்று சொல்லிப் பொருத்தனை பண்ணிக்கொண்டான்”.

இங்கே யாக்கோபு தேவனாகிய கர்த்தருக்குத் தசமபாகம் செலுத்துவதாகப் பொருத்தனை பண்ணிக்கொண்டான் என்று நாம் காணலாகும்.

ஆகவே நாம் இங்குக் காண்பது என்ன? நோவாவின் காலத்தில் நேரிட்ட ஜலப்பிரளயத்துக்குப் பிறகு மோசேயின் காலம் மட்டுமாகவுள்ள இடைப்பட்ட காலம் மனச்சாட்சியின் காலம் என்று அழைக்கப்பெறும்.

அக்காலத்தில் ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு முதலிய நம்முடைய முற்பிதாக்கள் வாழ்ந்து வந்தனர். அந்த மனச்சாட்சியின் காலத்திலும் தசமபாகம் செலுத்துகின்ற ஒரு பெருவழக்கம் இருந்தது என்பது தெளிவு.

அந்தப் பெருவழக்கமே மோசேயின் நியாயப்பிரமாணத்தின் காலத்திலும் இந்தக் கிருபையின் காலத்திலும் தேவனுடைய மக்கள் எல்லாரும் தங்களுடைய வருமானங்கள் எல்லாவற்றிலும் தசமபாகம் செலுத்த வேண்டும் என்று வற்புறுத்தப்பட்டது.

நம்முடைய முற்பிதாக்களாகிய ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு முதலான யாவரும் தேவனாகிய கர்த்தருக்குத் தசமபாகம் செலுத்தினார்கள். தசமபாகங்களைச் செலுத்த வேண்டுமென்று வேதாகம அறிவிப்போ, அல்லது கட்டளையோ நம் முற்பிதாக்களின் காலத்தில் இருந்ததாக நாம் அறியக்கூடவில்லை. ஆயினும் அவர்களோ செலுத்தினார்கள்.

ஆபிரகாம் முதலான அவர்கள் எல்லாருக்கும். தேவன் அவர்கள் மனச்சாட்சியில் உணர்த்தினார். அல்லது தேவன் தம்முடைய மெல்லிய சத்தத்தினால் அவர்களுடைய இருதயங்களில் பேசினார் என்றுதான் நாம் அறியக்கூடியதாயிருக்கின்றது. ஏனெனில் அந்நாட்களில் தேவன் அவர்களோடு நேரிடையாக, முகமுகமாய்ப் பேசினார் என்று நாம் அறிந்துகொள்ளலாகும்.

யாத்திராகமம் 2:15 ; 34:20 உபாகமம் 16:16–17 ஆகிய வசனங்களைப் பார்க்க. இந்த வேதாகம வாக்கியங்களில் நாம் காண்பதென்ன? கர்த்தருடைய மக்கள் தங்கள் தேவனாகிய கர்த்தருடைய சந்நிதானத்தில் வரும்போது வெறுங்கையோடே வரக்கூடாது; அவர்கள் தங்கள் தகுதிக்கு ஏற்ப காணிக்கையைக் கொண்டுவரவேண்டும்.

ஆகவே, தசமபாகங்கள், காணிக்கைகள் குறித்து வேதாகமத்தில் தெளிவான அறிவிப்புகள் உள்ளன என்பது வெளிப்படை.

தசமபாகங்களின் ஆன்ற மதிப்பு

மிகுந்த மதிப்போடும் பேராவலோடும் நாம் தேவனைப் பயபக்தியுடன் ஆராதிக்கின்ற முறைமையின்படியே நாம் தசமபாகங்கள், காணிக்கைகளாகியவைகளைச் செலுத்தவேண்டு

மென்னும் பேருண்மையை நான், "தசம பாகங்களின் ஆன்ற மதிப்பு" என்னும் சொற்றொடரின் வாயிலாக அறிவிக்க விரும்பு கின்றேன்.

தசமபாகங்களின் ஆன்ற மதிப்பைக்குறித்துப் பேசுகின்ற வேதவாக்கியங்களை நாம் இங்குக் காண்போம். முதலாவதாக நாம் நம்முடைய தேவனாகிய கர்த்தருடைய வாய்மொழியைக் காண்போம்.

"தேசத்திலே நிலத்தின் வித்திலும் விருட்சங்களின் கனியிலும் தசமபாகம் எல்லாம் கர்த்தருக்கு உரியது; அது கர்த்தருக்குப் பரிசுத்தமானது". ஆம்; தசமபாகங்களும் காணிக்கைகளும் கர்த்தருக்குப் பரிசுத்தமானவை.

ஆகவே நம்முடைய வருமானத்தில் பத்தில் ஒரு பாகம் கர்த்தருக்கு உரியது; அது பரிசுத்தமானது.

இன்று நான் கர்த்தருக்குரிய தசமபாகங்களையும் காணிக்கைகளையும் நாம் மிகுந்த பயபக்தியுடன் செலுத்த வேண்டும் என்று சொல்லுவேனாயின், அதன் முதற்காரணம் தசமபாகங்களும் காணிக்கைகளும் கர்த்தருக்குப் பரிசுத்தமானவை. ஆகையால் தசமபாகங்களையும் காணிக்கைகளையும் நாம் ஆன்ற மதிப்போடும், எல்லா பயபக்தியோடும் செலுத்துவ தோடமையாது, அக்கடமையில் நாம் ஒருபோதும் தவறவும் கூடாது. தசமபாகங்களாகவும் காணிக்கைகளாகவும் பிரித்து வைக்கும் பணத்தை நாம் நம்முடைய சொந்தச் செலவிற்கு எடுக்கவோ, செலவழிக்கவோ கூடாது.

ஒருவேளை நாம் செலுத்தத் தவறுவோமாயின் நாம் செய்ய வேண்டுவதென்ன?

"ஒருவன் தன் தசமபாகத்தில் எவ்வளவாவது மீட்டுக் கொள்ள மனதாயிருந்தானானால், அதனுடன் ஐந்தில் ஒரு பங்கைக்கூட்டிக் கொடுக்கக்கடவன்" (லேவியராகமம் 27:31) என்று திருமறையானது நமக்குக் கட்டளையிடுகின்றது.

தசமபாகங்கள் காணிக்கைகளைச் செலுத்தாத கர்த்தருடைய பிள்ளைகளைக் குறித்துப் பரிசுத்த வேதாகமம் கூறுவது இங்குக் குறிப்பிடத்தக்கது. "மனிதன் தேவனை வஞ்சிக்கலாமா? நீங்களோ என்னை வஞ்க்கிறீர்கள். எதிலே உம்மை வஞ்சித்தோம் என்கிறீர்கள்? தசமபாகங்களிலும் காணிக்கைகளிலுந்தானே" (மல்கியா 3:8) என்று சொல்லுகின்றது.

ஆங்கில மொழியாக்கத்தில், மனிதன் தேவனைக் கொள்ளையிடலாமா? என்று சொல்லப்பட்டுள்ளது. ஆகையால் தேவனுக்கு உரியவைகளாகிய தசமபாகங்களையும் காணிக்கைகளையும் செலுத்தாத கர்த்தருடைய பிள்ளைகளைக் "கொள்ளைக் கூட்டத்தார்!" என்று சொன்னாலும், அது மீக்கூற்றாகாது.

மேலும் தசமபாகங்கள் காணிக்கைகளைக் குறித்து பரிசுத்த வேதாகமம் கூறுவதைப்பாருங்கள். "பரிசுத்தமானதை விழுங்குகிறதும், பொருத்தனை செய்தபின்பு யோசிக்கிறதும் மனிதனுக்குக் கண்ணியாயிருக்கும்" (நீதி. 20:25).

தசமபாகங்களும் காணிக்கைகளும் பரிசுத்தமானவை. அவைகளை விழுங்குவது கண்ணியை வருவிக்கும்! நம்முடைய இகபர வாழ்க்கையின் முன்னேற்றத்தைத் தடுத்து நிறுத்துவதற்கு வெறொரு கண்ணி தேவையில்லை. கிறிஸ்தவர்களில் பெரும்பாலோர் தங்களது தொழில் துறையிலும் வியாபாரத் துறையிலும் முன்னேறவொட்டாமல் தடைப்படுவதும், வறுமையில் உழல்வதும் இதனால்தான். கடன்களில் மூழ்கித் தவிப்பதற்கும் இதுவே முதற்காரணமாகும்.

இறுதியாக நம்முடைய பரிசுத்த வேதாகமம் நம்மை எச்சரித்து அறிவிக்கின்ற வேத வாக்கியங்களையும் நோக்குவோம்.

"நீ உன் தேவனாகிய கர்த்தருக்கு எப்பொழுதும் பயந்திருக்கப் பழகும்படிக்கு, வருஷந்தோறும் நீ விதைக்கிற விதைப்பினாலே வயலில் விளையும் எல்லாப் பலன்களிலும் தசமபாகத்தைப் பிரித்து, உன் தேவனாகிய கர்த்தர் தமது நாமம் விளங்கும்படி தெரிந்துகொள்ளும் ஸ்தானத்திலே, உன்

தானியத்திலும் உன் திராட்சரசத்திலும் உன் எண்ணெயிலும் தசமபாகத்தையும், உன் ஆடுமாடுகளின் தலையீற்றுகளையும் அவருடைய சந்நிதியில் புசிப்பாயாக" (உபாகமம் 14:22–23).

ஆகையால், தசம பாகங்களும் காணிக்கைகளும் தேவனுடைய ஆராதனையில் ஒரு தனிச்சிறப்புடைய பாகத்தைக் கொண்டுள்ளது என்பது எவ்வளவு உண்மையாயிருக்கின்றது!

தசம பாகங்களை ஏற்றுக்கொள்ளுதல்

தசம பாகங்களையும் காணிக்கைகளையும் யார் பெற்றுக் கொள்ள வேண்டும் என்பதனைச் சொல்லுவதுதான் இது. தசம பாகங்களையும் காணிக்கைகளையும் ஏற்றுக்கொள்ளுவோர் அவைகளை எவ்வளவு மதிக்க வேண்டும்? இவ்வினாவிற்கு ஏற்புடைய விடையை எண்ணாகமம் 18ஆம் அதிகாரத்தில் நாம் காணலாகும்.

எண்ணாகமம் 18ஆம் அதிகாரத்தில் கர்த்தர் ஆரோனையும் அவனுடைய குமாரர்களையும், லேவியரான அவனுடைய சகோதர்களையும் நோக்கிச் சொல்லுகின்றார்.

எண்ணாகமம் 18:11 – "இஸ்ரவேல் புத்திரர் ஏறெடுத்துப் படைக்கிறதும் அசைவாட்டுகிறதுமான அவர்களுடைய எல்லாக் காணிக்கைகளின் படைப்பும் உன்னுடையவைகளாயிருக்கும்; அவைகளை உனக்கும் உன் குமாரருக்கும் உன் குமாரத்திகளுக்கும் நித்திய நியமமாகக் கொடுத்தேன். உன் வீட்டிலே சுத்தமானவர்கள் எல்லாரும் அவைகளைப் புசிக்கலாம்".

எண்ணாகமம் 18:12 - அவர்கள் (இஸ்ரவேல் புத்திரர்கள்) கர்த்தருக்குக் கொடுக்கும் அவர்களுடைய முதற்பலனாகிய உச்சிதமான திராட்சரசத்தையும் தானியங்களையும் உனக்கு உரியதாகக்கொடுத்தேன்.

எண்ணாகமம் 18:21 – "இதோ, லேவியின் புத்திரர் ஆசரிப்புக் கூடாரத்தின் பணிவிடையைச் செய்கிற அவர்களுடைய வேலைக்காக இஸ்ரவேலருக்குள்ளவை எல்லா

வற்றிலும் தசமபாகத்தை அவர்களுக்குச் சுதந்திரமாகக் கொடுத்தேன்".

எண்ணாகமம் 18:24 – "இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருக்கு ஏறெடுத்துப் படைக்கும் படைப்பாகிய தசமபாகத்தை லேவியருக்குச் சுதந்தரமாகக் கொடுத்தேன்; ஆகையால் இஸ்ரவேல் புத்திரரின் நடுவே அவர்களுக்குச் சுதந்தரமில்லையென்று அவர்களுக்குச் சொன்னேன் என்றார்".

எண்ணாகமம் 18:31 - "அதை நீங்களும் உங்கள் குடும்பத்தாரும் எவ்விடத்திலும் புசிக்கலாம்; அது நீங்கள் ஆசரிப்புக் கூடாரத்தில் செய்யும் பணிவிடைக்கு ஈடான உங்கள் சம்பளம் ".

எண்ணாகமம் 18ஆம் அதிகாரத்திலுள்ள மேற்காண்பிக்கப்பட்டுள்ள வேதபகுதிகளேயன்றி II நாளாகமம் 31:4; நெகேமியா13:5,10 ஆகிய வேதவாக்கியங்களும், தேவாலயத்திலுள்ள ஆசாரியர்களும் லேவியர்களுமே தசமபாகங்களையும் காணிக்கைகளையும் பெற்றுக்கொள்ளுவதற்கு உரியோராவர் என்று சொல்லுகின்றன.

ஆகையால், லேவியர்கள் தேவனுடைய ஆலயத்தில் பணிவிடைக்காரர்களாயிருக்கின்றபடியால், தசமபாகங்களும் காணிக்கைகளும் அவர்களுக்கே உரியவை. அவர்களே அவைகளை ஏற்றுக்கொள்ளுவதற்கு உரியோராவர்.

எருசலேமிலுள்ள தேவாலயத்தில் பணிவிடைக்காரர்களாயிருந்த லேவியர்களுக்கு அவர்களுக்குரிய பங்கு கொடுக்கப்படவில்லை என்பதனையும், பணிவிடை செய்கிற லேவியரும் பாடகரும் அவரவர்கள் தங்கள் வெளிநிலங்களுக்கு ஓடிப்போய் விட்டார்கள் என்பதையும் அறிந்துகொண்ட நெகேமியா, தலைமையானவர்களோடே வழக்காடி, "தேவனுடைய ஆலயம் கைவிடப்பட்டுப்போவானேன்?" என்று சொல்லி லேவியர்களையும் பாடகர்களையும் சேர்த்து அவரவர்களுடைய நிலையில் வைத்தான் என்று நாம் காணலாகும். (நெகேமியா 13:10–11)

அதுபோலவே எசேக்கியா, ஆசாரியரும் லேவியரும் கர்த்தருடைய நியாயப்பிரமாணத்தை உற்சாகமாய்க் கைக்கொள்ளும்படி, அவர்களுக்குரிய பாகத்தைக் கொடுக்க ஜனங்களுக்கும் எருசலேமின் குடிகளுக்கும் கட்டளையிட்டான். (II நாளாகமம் 31:4)

எருசலேமிலுள்ள ஆலயத்தில் பணிவிடைகளைச் செய்யவும், நியாயப்பிரமாணத்தை உற்சாகமாய்க் கைக்கொண்டொழுகவும் ஆசாரியர்களுக்கும் லேவியர்களுக்கும் அவர்களுக்குரிய பங்கு - அதாவது தசம பாகங்களிலும் காணிக்கைகளிலும் பங்கு - கொடுக்கப்பட்டது என்பது இதனால் தெளிவாய் நாம் அறியலாகும்.

ஆயினும் இந்நாட்களில் தசமபாகங்கள், காணிக்கைகளை விசுவாசிகள் கொடுக்கும் காரியத்தில் ஒரு தவறான எண்ணம் சிற்சில இடங்களில் தோன்றியுள்ளன. இந்நாட்களில் ஜெபக் கூட்டங்கள், சமயக்கருத்துக்களைப் பரப்புவதற்காக மாதந்தோறும் வருகின்ற வெளியீடுகள், நாடுமுழுவதும் சுவிசேஷத்தைப் பரப்பும் வகையில் உருவாகிவருகின்ற மிஷனரி ஊழிய அமைப்புகள் முதலானவைகளைச் சிலர் ஏற்படுத்தி நடத்தி வருகின்றார்கள்.

திருச்சபையின் விசுவாசிகள் கொடுக்கின்ற தசமபாகங்கள், காணிக்கைகள் ஆகியவற்றில் தங்களுக்கும் பங்குண்டு என்று அவர்கள் உரிமை பாராட்டுகின்றார்கள்.

பழைய ஏற்பாட்டின் காலத்தில் தசம்பாகங்களும் காணிக்கைகளும், ஆசாரியர்கள், லேவியர்கள், பாடகர்கள் தீர்க்கதரிசிகள் முதலானவர்களுக்குக் கொடுக்கப்பட்டன; ஆயினும் புதிய ஏற்பாட்டின் காலத்தில் தம்முடைய திருச்சபைகளின் வாயிலாகவும், தனிப்பட்ட நிலையில் இயங்குகின்ற ஜெபக் கூட்டங்கள், சமயப் பத்திரிகைகள், சுவிசேஷத்தைப் பரப்புகின்ற மிஷனரி ஊழியங்கள் ஆகியவைகளின் வாயிலாகவும் தேவன் தம்முடைய ஊழியத்தை நடத்திக்கொண்டு வருகின்றார்.

ஆகவே விசுவாசிகளால் கொடுக்கப்படுகின்ற தசமபாகங்களும் காணிக்கைகளும் மேற்சொல்லப்பட்ட யாவருக்கும்

பகிர்ந்து கொடுக்கப்பட வேண்டுமென்பதே அன்னார்களின் வாதமாகும். இது தவறான கருத்தாகும். அதோடு தேவ கட்டளைக்கு முறண்பாடானாது.

பழைய, புதிய ஏற்பாடுகளின் நாட்களில் திருச்சபைகள் இருந்தன. பழைய ஏற்பாட்டின் திருச்சபைகளில் ஆசாரியர்களும் லேவியர்களும் ஊழியஞ்செய்தார்கள். ஆகவே அவர்கள் காணிக்கைகளையும் தசமபாகங்களையும் பெற்றுக்கொண்டார்கள். அவைகள் அவர்களுக்குரிய பங்காகும்.

புதிய ஏற்பாட்டின் காலத்தில் அவர்களுடைய திருச்சபை காணிக்கைகளையும் தசமபாகங்களையும் பெற்றுக்கொண்டன.

சுவிசேஷ ஊழியங்களையும், அதன் அமைப்புகளையுங் குறித்து நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து கூறியுள்ளது இங்குக் குறிப்பிடத்தக்கது. சுவிசேஷ ஊழியத்தைச் செய்யும்படி அவர் தம்முடைய சீடர்களை அனுப்பும்போது, "உங்கள் கச்சைகளில் பொன்னையாவது வெள்ளியையாவது செம்பை யாவது, வழிக்காகப் பையையாவது, இரண்டு அங்கிகளை யாவது, பாதரட்சைகளையாவது, தடியையாவது, தேடி வைக்க வேண்டாம்; வேலையாள் தன் ஆகாரத்துக்குப் பாத்திரனாயிருக் கின்றான்" (மத்தேயு 10:9–10) என்று சொல்லியுள்ளார்.

தனிப்பட்ட நிலையில் இயங்குகின்ற இத்தகைய ஜெபக் கூட்டங்கள், பத்திரிகைகள், மிஷனரி ஊழியங்கள் முதலானவை தசமபாகங்களினால் ஆதரிக்கப்பட்டன என்பதற்குப் பரிசுத்த வேதாகமத்தில் ஆதாரங்களோ சான்றுகளோ இல்லை. பரிசுத்த அப்போஸ்தலனாகிய பவுல் எங்கும் சுற்றித்திரிந்து சுவிசேஷத்தைப் பிரசங்கித்து, ஆங்காங்கே திருச்சபைகளை உருவாக்கினா ராயினும், அவர் விசுவாசிகளின் தசமபாகங்களின் வாயிலாக ஆதரிக்கப்பட்டார் என்பதற்கு எத்தகைய ஆதாரங்களுமில்லை.

தனிப்பட்ட நிலையில் இயங்குகின்ற இத்தகைய ஜெபக் கூட்டங்கள், மிஷனரி ஊழியங்கள் ஆகியவைகளுக்கு நான் ஆதரவு அளிப்பவனேயன்றி அவைகளை எதிர்த்து நிற்பவனல்ல.

ஆயினும் இவ்வாறு தனித்து இயங்கும் ஓர் அமைப்பை உருவாக்கும்படி நம்முடைய தேவனாகிய கர்த்தர் ஒருவனை நடத்துவாராயின், அவர் அவனுடைய பொறுப்புக்களையும் தரிசனங்களையும் கனம்பண்ணுவார்; அவனுடைய எல்லாத் தேவைகளையும் அவர் சந்திப்பார்; அது உறுதி.

மேலும் திருச்சபையின் மேய்ப்பர்களின் வாயிலாகவே தனித்து இயங்குகின்ற ஜெபக்கூட்டங்கள், பத்திரிகைகள், மிஷனரி ஊழியங்கள் முதலிய அமைப்புகளுக்கு உதவி செய்வது நலமாகும்; ஏனெனில் ஏனையோரினும் அவர்கள்தான் இந்த அமைப்புகளின் தரமறிந்து உதவும் அறிவு பெற்றவராயிருக்க முடியும்.

பிலிப்பியர் 4:18–20 வசனங்கள் பார்க்க. அப்போஸ்தலனாகிய பரிசுத்த பவுல் தசமபாகங்களுக்கு உரிமை கொண்டாடினார் என்று நாம் இங்குக் காணவில்லை. அவருக்குப் பிலிப்பியர் சபையார் ஓர் உதவித்தொகையை அனுப்பிவைத்தார்களெனில் அது அவர்கள் அப்போஸ்தலனுக்கு விரும்பிக் கொடுத்த ஒரு காணிக்கையாகும். பிலிப்பியர் சபையைப் பரிசுத்த பவுல்தாமே ஏற்படுத்தினாராயினும் அவர் அவர்களிடமிருந்து தசமபாகத்தை எதிர்நோக்கிக் கொண்டிருந்தார் என்று நாம் அறியக்கூடவில்லை.

திருச்சபைகள்தாமே சுவிசேஷகர்களை அனுப்ப வேண்டும். சுவிசேஷம் அறிவிக்கப்படாத இடங்களிலும், தேசத்தின் மூலை முடுக்குகளிலெல்லாம் சுவிசேஷம் அறிவிக்கின்ற பணியை அவர்களே தொடங்க வேண்டும்.

இந்நாட்களில் இரண்டுவகையான ஊழியங்களை நாம் காணலாகும். அவைகள் முறையே விசுவாச ஊழியம்; ஊதியத் துடன் கூடிய ஊழியம் என்பன. ஆயினும் எவர்கள் எந்த நிலையில் ஊழியஞ்செய்யும்படி அழைக்கப்பட்டார்களோ, அந்த நிலையில் அவர்கள் உண்மையும் உறுதியுமாய் ஊழியஞ்செய்ய வேண்டும். உண்மையும் உறுதியுமாய் ஊழியஞ்செய்ய வேண்டு மென்று நான் சொல்லும்போது I கொரிந்தியர் 7ஆம் அதிகாரம்,

பொதுவாக இல்லற வாழ்க்கையில் உள்ளவர்களுக்குப் பொருந்து மாயினும், சிறப்பாக நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து வுடன் பிணைப்பட்டு ஊழியஞ்செய்கின்ற அவருடைய ஊழியர் களுக்கும் பொருந்தும். I கொரிந்தியர் 7:20ஆம் வசனம் இங்குக் குறிப்பிடத்தக்கது. "அவனவன் தான் அழைக்கப்பட்ட நிலை மையிலே நிலைத்திருக்கக்கடவன்" என்றுரைக்கின்றது அந்த வேதவாக்கியம்.

இக்கட்டத்தில் தனிப்பட்ட நிலையில் என்னுடைய ஊழியத் தைக் குறித்துச் சிறிது சொல்ல விரும்புகின்றேன். ஊழியத்திற்கு அழைக்கப்பட்ட என்னுடைய தொடக்க நாட்களில் பசியும் பட்டினியும் உபத்திரவங்களும் இருந்தன. ஒருவன் கர்த்தரால் சோதிக்கப்படும் நிலையில் உண்மையும் உறுதியுமாய் நிற்பா னாயின், பின்னர் அவனுக்கு வளமுள்ள வாழ்க்கை உண்டு.

ஒரு சமயம் உணவின்றியும், வேறொரு சமயம் குடிக்க ஒரு காபி இன்றியும், இன்னொரு சமயம் ஊழியத்திற்குச் சென்று திரும்பி வரும்போது வழிப்பயணத்துக்கு வேண்டிய காசு இன்றியுமிருந்த நாட்களை என் ஊழியத்தின் தொடக்கநாட்களில் சந்திக்கவேண்டியதாயிருந்தது. கர்த்தரோ உண்மையுள்ளவர். விசுவாசத்தின் பாதையில் அன்று நடத்தின கர்த்தர் இன்றும் என்னை நடத்துகின்றார். அவருக்கு நன்றியுடன் கூடிய என் ஸ்தோத்திரம் உரித்தாகுக. அந்நாட்களில் நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து என்னை ஊதியத்துடன் கூடிய ஊழியத்திற்கு அழைத்திருப்பாராயின் நான் அவ்வழி சென்றிருக்கக்கூடும். ஆயினும் கர்த்தரோ விசுவாச ஊழியத்திற்கு அழைத்து, அதிலே நிலைகொண்டிருக்கப் படிப்பித்து, இந்நாள்மட்டும் என்னை நடத்தி வருகின்றார்.

ஆகவே தசமபாகங்களும் காணிக்கைகளும் திருச் சபையைக் கண்காணிக்கும்படி தேவனால் நியமிக்கப்பட்ட ஊழியர் களுக்கே உரியன. அவர்களே அவைகளைப் பெற்றுக் கொள்வார்கள்.

தசமபாகங்கள் தன்னகத்தே கொண்டுள்ளதாகிய மெய்யியல்பான ஆசீர்வாதங்கள்

நாம் ஏன் தசமபாகங்களையும் காணிக்கைகளையும் செலுத்தவேண்டும்?

ஆதியாகமம் 14:18–20 வசனங்களை நோக்குக. ஆபிரகாம் பகையரசர்களை முறியடித்து வெற்றியோடு திரும்பி வரும்போது உன்னதமான தேவனுடைய ஆசாரியனாயிருந்த சாலேமின் ராஜாவாகிய மெல்கிசேதேக்கு அவனுக்கு எதிர்கொண்டு வந்து அவனை ஆசீர்வதித்தான். அவனுக்கு ஆபிரகாம் எல்லாவற்றிலும் தசமபாகம் கொடுத்தான். அதன் வாயிலாக ஆபிரகாம் தேவனுடைய ஆசீர்வாதமும், போரில் வெற்றியும் பெற்றான்.

ஆதியாகமம் 28:20–22: யாக்கோபு தன்னுடைய பிதாக்களின் தேவனாகிய கர்த்தருக்கு அவனுக்கு கர்த்தர் தரும் எல்லா வற்றிலும் தசமபாகம் செலுத்துவதாகப் பொருத்தனை பண்ணிக் கொண்டான். யாக்கோபு பண்ணிக்கொண்ட பொருத்தனையின் படியே தேவனுடைய சமுகத்தையும், பாதுகாப்பினையும் பராமரிப் பினையும் பெற்றான்.

உபாகமம் 12:5–7: கானான் தேசத்திலே இஸ்ரவேல் புத்திரர் கைக் கொண்டொழுகவேண்டிய தேவனுடைய கட்டளை களையும் நியாயங்களையும் மோசே அவர்களுக்குக் குறிப்பிடும் பொழுது, "உங்கள் தேவனாகிய கர்த்தர் தம்முடைய நாமம் விளங்கும்படி தெரிந்துகொள்ளும் ஸ்தானமாகிய அவருடைய வாசஸ்தலத்திலே சர்வாங்க தகனபலிகளையும், பலிகளையும், பொருத்தனைகளையும் உற்சாக பலிகளையும், ஆடுமாடுகளின் தலையீற்றுகளையும் கொண்டுவந்து, அங்கே உங்கள் தேவனாகிய கர்த்தருடைய சந்நிதியிலே புசித்து, நீங்கள் கையிட்டுச் செய்ததும், உங்கள் தேவனாகிய கர்த்தர் உங்களை ஆசீர்வதித்ததுமான யாவுக்காகவும் நீங்களும் உங்கள் குடும்பத் தாரும் சந்தோஷப்படுவீர்களாக" என்று சொல்லுகின்றார். இதனால், தசமபாகங்கள் காணிக்கைகளைச் செலுத்துகின்றவர்கள், தங்கள்

கையின் பிரயாசத்தின் பலனையும் தேவனால் அருளப்படும் இம்மைக்குரிய ஆசீர்வாதங்களையும் பெறுவார்கள் என்பது உறுதி.

நீதிமொழிகள் 3:9,10: "உன் பொருளாலும் உன் எல்லா விளைவின் முதற்பலனாலும் கர்த்தரைக் கனம்பண்ணு. அப்பொழுது உன் களஞ்சியங்கள் பூரணமாய் நிரம்பும்; உன் ஆலைகளில் திராட்சரசம் புரண்டோடும்." என்று காண்கிறோம். இங்குத் தேவனால் நமக்கு அருளப்பெறுகின்ற வளமுள்ள வாழ்க்கை நினைப்பூட்டப் படுகின்றது.

எசேக்கியேல் 44:28−30: "அவர்களுக்குரிய (ஆசாரியர்களுக் குரிய) சுதந்தரம் என்னவென்றால்; நானே அவர்கள் சுதந்தரம்; ஆகையால் இஸ்ரவேலில் அவர்களுக்குக் காணியாட்சியைக் கொடாதிருப்பீர்களாக; நானே அவர்களுடைய காணியாட்சி. போஜன பலியையும் பாவ நிவாரணபலியையும் குற்ற நிவாரண பலியையும் அவர்கள் புசிப்பார்கள்; இஸ்ரவேலிலே பொருத்தனை பண்ணப்பட்டதெல்லாம் அவர்களுடையதாயிருப்பதாக. சகலவித முதற்கனிகளில் எல்லாம் முந்தின பலனும், நீங்கள் காணிக்கையாய்ச் செலுத்தும் எவ்விதமான பொருள்களும் ஆசாரியர்களுடையதாயிருப்பதாக; உங்கள் வீட்டில் ஆசீர்வாதம் தங்கும்படி நீங்கள் பிசைந்த மாவில் முதற்பாகத்தையும் ஆசாரியனுக்குக் கொடுக்கக்கடவீர்கள்". ஆகவே கர்த்தருக்குத் தசம பாகங்களும் காணிக்கைகளும் செலுத்துகின்ற விசுவாசி களின் வீடுகளில் தேவனுடைய ஆசீர்வாதம் தங்குகின்றது.

மல்கியா 3:10: "என் ஆலயத்தில் ஆகாரம் உண்டா யிருக்கும்படித் தசமபாகங்களையெல்லாம் பண்டசாலையிலே கொண்டுவாருங்கள்; அப்பொழுது நான் வானத்தின் பலகணி களைத் திறந்து, இடங்கொள்ளாமற் போகுமட்டும் உங்கள் மேல் ஆசீர்வாதத்தை வருஷிக்கமாட்டேனோவென்று அதினால் என்னைச் சோதித்துப் பாருங்கள் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்." கர்த்தருக்குத் தசமபாகங்களும் காணிக்கைகளும்

செலுத்துவோர் இம்மைக்கண் வளமுள்ள வாழ்க்கையை நடத்தி, அவர்களைச் சுற்றிலும் வாழ்கின்ற மக்களுக்கு அரும்பெரும் சாட்சிகளாய்த் திகழ்வார்கள். கர்த்தருடைய ஆசீர்வாதம் அவர்கள் மேல் தங்கியிருப்பதனைப் புறம்பான மக்கள் காண்பார்கள்.

தசமபாகங்களையும் காணிக்கைகளையும் செலுத்துகின்ற விசுவாசிகளுக்கு நம்முடைய தேவனாகிய கர்த்தர் அருளுகின்ற ஆசீர்வாதங்கள் எவையெவை என்பதனை இந்த வேத வாக்கியங்கள் நமக்கு மிகவும் தெளிவாய் உணர்த்துகின்றன வல்லவா?

தசமபாகங்களின் ஆட்சி முறை அல்லது நிர்வாகப் பொறுப்பு

தசமபாகங்கள், காணிக்கைகள் ஆகியவைகளின் ஆட்சி முறை அல்லது நிர்வாகம்பற்றி இரண்டு வேதாகமப்பகுதிகள் கூறுகின்றன. அவைகள் முறையே II நாளாகமம் 31:4−18; நெகேமியா 13:11−13 என்பனவாம். அவைகளைத் தனித்தனியே நோக்குவோம்.

முதலாவது வேதாகமப்பகுதி:- II நாளாகமம் 31:4−18

இராஜாவாகிய எசேக்கியா, ஆசாரியரும் லேவியரும் கர்த்த ருடைய நியாயப்பிரமாணத்தை உற்சாகமாய்க் கைக்கொள்ளும்படி, அவர்களுடைய பாகத்தைக் கொடுக்க ஜனங்களுக்கும் எருச லேமின் குடிகளுக்கும் கட்டளையிட்டான்.

அரசனுடைய வார்த்தை பிரசித்தமானபோது, இஸ்ரவேல் புத்திரர் தானியத்திலும், திராட்சரசத்திலும், எண்ணெயிலும், தேனிலும், நிலத்தின் எல்லாவற்றிலும் முதற்பலன்களைத் திரளாகக் கொண்டுவந்து, சகலத்திலும் தசமபாகத்தைப் பரிபூரணமாய்க் கொடுத்தார்கள். யூதாவின் பட்டணங்களில் குடியிருந்த இஸ்ரவேல் புத்திரரும் யூதா புத்திரரும் மாடுகளிலும் ஆடுகளிலும் தசம பாகத்தையும் தங்கள் தேவனாகிய கர்த்தருக்குப் பரிசுத்தம் பண்ணப்பட்டவைகளில் தசமபாகத்தையும் கொண்டுவந்து

குவியல் குவியலாக வைத்தார்கள். மூன்றாம் மாதம் தொடங்கி ஏழாம் மாதம் மட்டும் அதனைச் செய்து முடித்தார்கள். (II நாளாகமம் 31:4–7)

அந்தக் காணிக்கையை ஆசாரியர்களும் லேவியர்களும் சாப்பிட்டுத்திருப்தியடைந்தார்கள். கர்த்தர் தம்முடைய ஜனத்தை ஆசீர்வதித்தபடியால், மேலும் திரட்சியான அம்பாரம் மீந்திருந்தது. (II நாளாகமம் 31:8–10)

எசேக்கியா கர்த்தருடைய ஆலயத்தில் பண்டசாலைகளை ஆயத்தப்படுத்தக் கட்டளையிட்டான். பண்டசாலைகளை ஆயத்தப்படுத்தின பின்பு அவைகளிலே காணிக்கைகளையும் தசமபாகத்தையும் பரிசுத்தம் பண்ணப்பட்டவைகளையும் உண்மையாய் எடுத்துவைத்தார்கள். அவைகள் மேல் லேவியனாகிய கொனனியா தலைவனும், அவன் தம்பியாகிய சிமேயி இரண்டாவதாயுமிருந்தான். (II நாளாகமம் 31:11–12)

அரசனாகிய எசேக்கியாவும் தேவனுடைய ஆலய விசாரணைக்காரனாகிய அசரியாவும் பண்ணின கட்டளையின்படியே, யெகியேலும், அசசியாவும், நாகாத்தும், ஆசகேலும், யெரிமோத்தும், யோசபாத்தும், ஏலியேலும், இஸ்மாகியாவும், மாகாத்தும், பெனாயாவும், கொனனியாவின் கீழும் அவன் தம்பி சிமேயியின் கீழும் விசாரிப்புக்காரர்களாயிருந்தார்கள். (II நாளாகமம் 31:13)

மேலும், கர்த்தருக்குச் செலுத்தப்பட்ட காணிக்கைகளையும் மகா பரிசுத்தமானவைகளையும் பங்கிடும்படி கிழக்கு வாசலைக் காக்கிற இம்னாவின் குமாரனாகிய கோரே என்னும் லேவியன் தேவனுக்குச் செலுத்தப்படும் உற்சாகக் காணிக்கைகள் மேல் அதிகாரியாயிருந்தான். (II நாளாகமம் 31:14)

அவனுடைய கைக்கு உதவியாக ஆசாரியரின் பட்டணங்களில் வகுப்புகளின்படியிருக்கிற தங்கள் சகோதரரிலே பெரியவனுக்கும் சிறியவனுக்கும் சரிசமானமாய்க் கொடுக்கும்படிக்கு, உண்மையுள்ளவர்கள் என்று எண்ணப்பட்ட ஏதேனும்,

மின்யமீனும் யெசுவாவும் செமாயாவும் அமரியாவும் செக்கனியாவும் ஏற்படுத்தப்பட்டார்கள். (II நாளாகமம் 31:15)

இவ்வாறு வம்ச அட்டவணைகளில் எழுதப்பட்ட மூன்று வயதுமுதல் அதற்குமேற்பட்ட ஆண்பிள்ளைகளைத் தவிர, கர்த்தருடைய ஆலயத்திற்குள் பிரவேசிக்கிற அவரவருக்கும், தங்கள் வகுப்புகளின்படியே, தங்கள் முறைகளிலே தாங்கள் செய்கிற தங்கள் பணிவிடைக்குத் தக்கதாய் அநுதினப்படி கொடுக்கப்பட்டது. (II நாளாக்மம் 31:16)

II நாளாகமம் 31ஆம் அதிகாரத்தில் நாம் பார்க்கின்றபடி தேவனுடைய ஆலயத்தின் பண்டசாலையில் சேர்த்து வைக்கப் பட்டிருந்த காணிக்கைகளையும் தசமபாகங்களையும் லேவியர்களே பாதுகாத்து, பகிர்ந்துகொடுத்து, அவைகளின் நிர்வாகப் பொறுப்பினை ஏற்று நடத்திவந்தார்கள் என்பதை நாம் காணலாம்.

இரண்டாவது வேதாகமப்பகுதி:- நெகேமியா 13:11–13

லேவியருக்கு அவர்களுக்குரிய பங்கு கொடுக்கப்படவில்லை; ஆகையால் எருசலேமின் தேவாலயத்தில் பணிவிடை செய்துகொண்டிருந்த லேவியரும் பாடகரும் அவரவர் தங்கள் வெளி நிலங்களுக்கு ஓடிப்போய்விட்டார்கள். அதனை அறிந்து கொண்ட நெகேமியா தலைமையானவர்களோடே வழக்காடி, "தேவனுடைய ஆலயம் கைவிடப்பட்டுப் போவானேன்" என்று சொல்லி லேவியர்களையும் பாடகர்களையும் சேர்த்து, தேவாலயத்தில் அவரவர் நிலையில் அவர்களை வைத்தான்.

அப்பொழுது யூதர் எல்லாரும் தானியம், திராட்சரசம், எண்ணெய் என்பவைகளில் தசமபாகத்தைப் பொக்கிஷ அறைகளில் கொண்டுவந்தார்கள். அப்பொழுது நெகேமியா ஆசாரியனாகிய செலேமியாவையும், வேதபாரகனாகிய சாதோக்கையும், லேவியரில் பெதாயாவையும், இவர்களுக்குக் கைத்துணையாக மத்தானியாவின் குமாரன் சக்கூரின் மகனாகிய ஆனானையும் பொக்கிஷ அறைகளில் விசாரிப்புக்காரராக வைத்தான். அவர்கள் உண்மையுள்ளவர்கள் என்று எண்ணப்பட்டார்கள்; ஆகையால்

தங்கள் சகோதரருக்குப் பங்கிடுகிற வேலை அவர்களுக்கு ஒப்பு விக்கப்பட்டது. (நெகேமியா 13:13) இங்கும் லேவியர்களும் ஆசாரியர்களுமே ஆலயத்தின் பொக்கிஷங்களின் மேல் அதிகாரி களாகவும், லேவியர்களுக்குப் பங்கீடு செய்கிற வேலையைச் செய்கிறவர்களாகவும் நியமிக்கப்பட்டார்கள் என்று நாம் காண்கின்றோம்.

இவைகளினால் நாம் அறிவது என்ன? கர்த்தருடைய மந்தையைக் கண்காணிக்கின்ற மேய்ப்பர்களும் அவருடன் பணியாற்றுகின்ற உதவி ஊழியர்களுமே தசமபாகங்களையும் காணிக்கைகளையும் நிர்வாகம் செய்கின்ற ஆட்சி பொறுப்பினை ஏற்று நடத்துவதற்குரியோராவர்.

இப்பொழுதும் இங்குச் சபையில் ஊழியர்களாகிய நாங்களே இந்த ஊழியத்தை உண்மையுடன் செய்து வருகின்றோம்.

தசமபாகங்களைக் குறித்துப் பதில் சொல்லும் பொறுப்புடையோர்

தசமபாகங்கள், காணிக்கைகள் ஆகியவைகளைக் குறித்துத் திருச்சபையின் ஊழியக்காரர்களாகிய நாங்களே தேவனுக்கும் அரசாங்கத்திற்கும் பதில் சொல்லும் பொறுப்புடை யோராயிருக்கின்றோம்.

ஆம், நாங்கள் தேவனுக்குக் கணக்கு ஒப்புவிக்க வேண்டும். II நாளாகமம் 31:12,15,18 வேதவாக்கியங்களை நோக்குக.

அரசனாகிய எசேக்கியாவால் தேவாலயத்தின் பண்டகசாலை பொறுப்பினை கவனிக்குமாறு நியமிக்கப்பட்ட லேவியர்கள் தங்களுடைய ஊழியத்தில் உண்மையுள்ளவர்களாயிருந்தார்கள்.

அதுபோலவே நெகேமியாவினால் ஆலயத்தின் பொக்கிஷங்கள்மேல் அதிகாரிகளாய் நியமிக்கப்பட்ட லேவியர்கள் தங்களுடைய ஊழியத்தில் உண்மையுள்ளவர்களாயிருந்தார்கள். (நெகேமியா 13:13)

கர்த்தருடைய ஊழியக்காரன் உண்மையில்லாதவனாயும், தன்னலம் படைத்தவனாயும், முறையின்றிச் செலவழிக்கின்ற வனாயும், நடுநிலைமை தவறியவனாகவும், அநீதியுள்ளவனாயும் இருந்தால், அவன் கர்த்தருடைய ஊழியத்தில் தொடர்ந்து நீடிக்க முடியாது. கர்த்தரே அவனைப் புறம்பாக்குவார்.

தேவனுடைய ஊழியக்காரன் அரசாங்கத்திற்குக் கணக்கு ஒப்புவிக்க வேண்டும். முற்காலத்தில் தேவாலயத்தின் பொறுப்பை ஏற்று நடத்தும் ஆசாரியர்களும், லேவியர்களும், அரசர்களும், ஆளுநர்களும், கணக்கு ஒப்புவிக்கும் பொறுப்புடையவர்களாயிருந் தார்கள். II நாளாகமம் 31:8–11 வசனங்களைப் பார்க்க.

அதுபோலவே இன்றைக்கும் மத்திய அரசு வருவாய்த் துறை அதிகாரிகளுக்கும் நம்முடைய திருச்சபையின் வரவு செலவு குறித்துள்ள கணக்குகளை ஆண்டுதோறும் ஒப்புவிக்க வேண்டும். அவர்கள் நம்முடைய சபையின் கணக்குப் புத்தகங் களையும் பார்வையிடலாம்.

இப்பொழுதும் இங்கு அப்போஸ்தல கிறிஸ்தவ சபையில் அப்போஸ்தல கிறிஸ்தவ சபை பொதுப் பேரவை சந்தா - கணக்கு, அப்போஸ்தல கிறிஸ்தவ சபை ஜெபவீடு - காணிக்கைகள் தசமபாகங்கள் ஆகியவை பற்றிய கணக்கு, அப்போஸ்தல கிறிஸ்தவ சபையின் சுவிசேஷ ஊழியம் – வெளி நாடுகளின் உதவி பற்றிய கணக்கு என்று மூன்று அமைப்பு களின் கணக்குகள், அவைகளின் வரவு செலவுகள் ஒழுங்காக எழுதப்பட்டு, தணிக்கை செய்யப்பட்டு வருகிறது.

அவ்வாறு தணிக்கை செய்யப்பெற்ற ஐந்தொகை கணக்கு விவரம் ஆண்டுதோறும் ஒழுங்காக மத்திய அரசு வருவாய்த் துறைக்கு அனுப்பப்படுகின்றன. அதிகாரிகளின் பார்வைக்கும் சம்பந்தப்பட்ட கணக்குப் புத்தகங்கள் சமர்ப்பிக்கப்படுகின்றன.

ஞாயிறு ஆராதனைகள் முதலான எல்லா ஆராதனை களிலும் விசுவாசிகள் செலுத்துகின்ற காணிக்கைகள் சேகரிக்கப் பட்டு, எண்ணித் தொகையிடப்பட்டு, காணிக்கைப் பதிவு ஏட்டில்

உடனுக்குடன் எழுதப்படுகின்றன. இவ்வாறு ஒழுங்கான முறையில் இங்கு அப்போஸ்தல கிறிஸ்தவ சபையின் கணக்குகள் வைக்கப்பட்டுள்ளன.

இதுகாறும் தசமபாகங்கள், காணிக்கைகளைக் குறித்துள்ள வேதபாடத்தைத் தியானித்துக் கொண்டிருந்தோம். கிறிஸ்தவ பெருமக்கள் இதுகுறித்து ஒரு தெளிவான விளக்கம் பெற வேண்டுமென்பதே எங்கள் வாஞ்சையும் விருப்பமுமாயிருக்கிறது.

சபையின் அமைப்பைக் குறித்துச் சந்தேகமா?

சபை யாருக்குச் சொந்தம்?

"கொரிந்துவிலே கிறிஸ்து இயேசுவுக்குள் பரிசுத்தமாக்கப் பட்டவர்களாயும், பரிசுத்தவான்களாகும்படி அழைக்கப்பட்டவர் களுமாயிருக்கிற தேவனுடைய சபைக்கும், எங்களுக்கும் தங்களுக்கும் ஆண்டவராயிருக்கிற நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தை எங்கும் தொழுதுகொள்ளுகிற அனைவருக்கும் எழுதுகிறதாவது" (I கொரி. 1:2).

இங்கு, "தேவனுடைய சபைக்கும்" என்று எழுதப் பட்டுள்ளது. சபை என்பது தேவனுக்கு மாத்திரமே சொந்தம். ஆகவேதான் அது தேவனுடைய சபை என்று அழைக்கப் படுகின்றது. இன்னார் இன்னாருடைய சபை என்று எழுதப்பட வில்லை.

கொரிந்து பட்டணத்திலே இருக்கும் சபை என்று குறிப் பிட்டாலும் அந்தச் சபை அந்தப் பட்டணத்திற்குச் சொந்த மானது அல்ல. பரிசுத்த வேதாகமம் சபை என்று குறிப்பிடும் போதெல்லாம் அது தேவனுக்குச் சொந்தமென்று தெளிவுபடுத்து கின்றது. கர்த்தரே சபையை உருவாக்கி உயிரூட்டினார். வேதாகமம் கூறுவது போல இந்தப் பூமியிலே சபை தோன்று வதற்குக் காரணகர்த்தா நம்முடைய தேவாதி தேவன் மாத்திரமே.

சபை எப்படி தேவனுக்குச் சொந்தமானது என்று ஒருவேளை நாம் நினைக்கலாம். தேவன் தம்முடைய சுய

ரத்தத்தினாலே சம்பாதித்துக்கொண்ட தமது சபை என்று வேதத்திலே தெளிவாக எழுதப்பட்டுள்ளது.

அப்போஸ்தலர் நடபடிகள் 20:28 ஆம் வசனத்திலே சபையானது எப்படி தேவனுக்குச் சொந்தமானது என்பதைப் பார்க்கிறோம். "ஆகையால், உங்களைக் குறித்தும், தேவன் தம்முடைய சுயரத்தத்தினாலே சம்பாதித்துக்கொண்ட தமது சபையை மேய்ப்பதற்குப் பரிசுத்தஆவி உங்களைக் கண்காணி களாக வைத்த மந்தை முழுவதையுங்குறித்தும், எச்சரிக்கையா பிருங்கள்" என்று சொல்லப்படிருக்கின்றது.

சபையும் திரித்துவமும்

அப். 20:28ஆம் வசனத்தைப் பார்க்கும்போது பிதாவாகிய தேவனும் குமாரனாகிய தேவனும் எப்போதும் ஒன்றாகவே இருக் கின்றனர் என்பதை அறியலாம். பிதாவும் குமாரனும் ஒன்றாக இணைந்து இந்தப் பூமியிலே சபையை நிறுவுவதிலே செயல் பட்டுக்கொண்டிருக்கிறார்கள்.

பிதா, குமாரன், பரிசுத்த ஆவியானவராகிய திரித்துவ தேவன் இந்தச் சபையை உருவாக்குவதிலே கிரியை செய்து கொண்டிருக்கிறார். அதினிமித்தமாகவே சபையினுடைய செல் வாக்கும் கனமும் இன்று விளங்குகிறது.

தேவன் தம்முடைய ஒரேபேறான குமாரனை இந்த உலகத் திற்கு அனுப்பினார். குமாரன் இரத்தத்தைச் சிந்தினார். இந்த இரத்தத்தின் மூலமாகவே சபையை உருவாக்கினார். எனவே, இது தேவனுடைய சபை. "நான் என் சபையைக் கட்டுவேன்" என்று சொன்னவர் நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவே.

சபையும் பேதுருவும்

மேலும், "நான் உனக்குச் சொல்லுகிறேன், நீ பேதுருவாய் இருக்கிறாய், இந்தக் கல்லின்மேல் என் சபையைக் கட்டுவேன்; பாதாளத்தின் வாசல்கள் அதை மேற்கொள்வதில்லை" (மத். 16:18) என்று வேதத்தில் சொல்லப்பட்டுள்ளது.

நீ பேதுருவாக இருக்கிறாய் (Petros) என்பதற்கு கிரேக்க மொழியிலே, "நீ ஒரு சிறு கல்லாக இருக்கிறாய்" என்று பொருள்படும். 'இந்தக்கல்லின்' மேல் என்று இயேசு சொல்லும் போது, கிரேக்க மொழியிலே பெரிய கன்மலை போன்ற பாறையைக் குறிக்கின்ற Petra என்பதாகும். இயேசு மகா பெரிய ஒரு கன்மலையாகவே (Petra) இருக்கிறார்.

பேதுருவின்மேல் சபையைக் கட்டும்படியாக இயேசு இந்த உலகத்திற்கு வந்தார் என்று கிறிஸ்தவ உலகத்திலே சிலர் தவறாக எண்ணுகிறவர்கள் அநேகர் இருக்கின்றார்கள். அதோடு பேதுருதான் முதலாவது போப்பாண்டவர் என்று சொல்லுகிற வர்களும் உண்டு. இயேசு கிறிஸ்து என்னும் மகா கன் மலையின்மேல் தேவன் சபையைக் கட்டினார்.

சபையை உருவாக்குவதிலே பரிசுத்த ஆவியானவர் கிரியை செய்துகொண்டிருக்கிறார் என்று பரிசுத்த வேதாகமம் மிகத் தெளிவாகக் கூறுகின்றது.

அப். 20:28இல் தேவசபையோடு இணைக்கப்பட்டுப் பரிசுத்த ஆவியானவரின் கிரியை சொல்லப் பட்டிருக்கிறது. பரிசுத்த ஆவியானவர் சபையை உருவாக்கு வதிலும், அதை வளரச்செய்வதிலும் ஈடுபட்டிருக்கின்றார்.

இயேசுகிறிஸ்துவின் உயிர்த்தெழுதலுக்குப் பிறகு அப். 2:47 வசனத்தில்தான் நாம் சபையைக் குறித்துப் பார்க்கிறோம். இரட்சிக்கப்படுகிறவர்களைக் கர்த்தர் அநுதினமும் சபையிலே சேர்த்துக்கொண்டு வந்தார் என்று வாசிக்கின்றோம்.

அப்போஸ்தலருடைய நடபடிகள் 2ஆம் அதிகாரத்திலே பரிசுத்த ஆவியானவர் ஊற்றப்பட்ட விதத்தைக் குறித்து அறிந்து கொள்கிறோம். ஜனங்கள் அந்நிய பாஷையிலே பேசினார்கள். பேதுரு சுவிசேஷத்தைக் கூறி அறிவித்தான். பின்னர் ஒரு பெரிய ஞானஸ்நான ஆராதனை நடந்தது. அதற்குப் பின்னர் அநு தினமும் சபையிலே ஆத்துமாக்கள் சேர்க்கப்பட்டார்கள்.

சபை பூமியில் பிறந்தது எப்போது?

பெந்தெகொஸ்தே நாளிலே சபை பூமியிலே பிறந்தது. நூற்றிருபதுபேர்மேல் பரிசுத்த ஆவி ஊற்றப்பட்டபோது சபையானது நிறுவப்பட்டது. இப்படியாக இந்தச் சபையை உருவாக்கும் புனித செயலிலே பிதாவாகிய தேவன், குமாரனாகிய தேவன், பரிசுத்த ஆவியானவராகிய தேவன் ஆகிய மூவரும் ஒன்றாகக் கிரியை செய்தார்கள்.

எப்பொழுது சபை சபையாக இருக்க முடியும்? தேவனுடைய விருப்பம் எப்படியோ அவ்வாறே சபை அமைக்கப் பட்டால்தான் சபை சபையாக இருக்கும். ஒரு சபை நிறுவப் படவேண்டும் என்பது தேவனுடைய சித்தம். தேவகுமாரன் அதை உருவாக்கினார். பரிசுத்த ஆவியானவர் ஆளுகை செய்து அதை வழி நடத்திச் செல்கிறார்.

அப்போஸ்தலனாகிய பவுல் தெசலோனிக்கேயர் சபை விசுவாசிகளுக்கு நிருபங்களை எழுதும்போது பிதாவாகிய தேவனுக்குள்ளும், கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுக்குள்ளும் இருக்கிற சபை என்று எழுதுகிறார்.

சபையும் பரிசுத்த ஆவியும்

ஆசியாமைனர் என்ற நாட்டினுடைய பகுதிகளில் சபை களுக்கு ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து செய்தியைக் கொடுத்த போது, "ஆவியானவர் சபைகளுக்குச் சொல்லுகிறதைக் காதுள்ள வன் கேட்கக்கடவன்" என்றார்.

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து அந்த வார்த்தைகளைச் சொன்னாலும், "ஆவியானவர் சொல்வதைக் காதுள்ளவன் கேட்கக்கடவன்" என்றார்.

இந்த உலகத்திலே இருக்கும் ஸ்தாபனங்களிலே மிக உன்னதமான ஸ்தாபனம் தேவசபையே. இக்கூற்றின் ஆதார மென்ன? பரிசுத்த ஆவியானவர் இந்தச் சபையை உருவாக்கி வழிநடத்திச் செல்வதே இதன் ஆதாரம்.

தவறான உபதேசங்கள்

இன்று கிறிஸ்தவ உலகத்திலே பற்பல குழுக்களைக் காண் கிறோம். ஒரு குழுவினர், "நாங்கள் இயேசுவை மட்டும்தான் விசுவாசிக்கின்றோம். எங்கள் நிறுவனத்தின் பெயரே 'இயேசு மாத்திரமே' (Jesus Only) என்பதாகும்; பிதா எங்கு இருக்கிறார்? இயேசுதான் பிதா; இயேசுதான் பரிசுத்த ஆவி; நாங்கள் 'இயேசு மாத்திரமே' என்ற குழுவைச் சேர்ந்தவர்கள்" என்பார்கள்.

மற்றொரு குழுவினர், "நாங்கள் யெகோவாவின் சாட்சிகள் என்பார்கள். நாங்கள் யெகோவாவாகிய அந்தத் தேவனுக்கு மட்டுமே முக்கியத்துவம் கொடுப்போம். இயேசு முக்கிமானவர் அல்ல, அவர் தேவகுமாரன் மாத்திரம் தான்" என்று கூறுவார்கள். இந்தக் குழுவினரோடு பேசி இருக்கிறீர்களா? நான் பேசி இருக்கிறேன்.

அவர்கள் ஒரு வசனத்தை எடுத்துப் பேசும்போது அதனுடைய பின்னணியைப் பார்க்காமல் அதைத்தனியாய் எடுத்துக் கூறுவார்கள். முதல் முறை அவர்கள் என்னிடம் வந்தபோது என்னால் அவர்களுக்குப் பதில் கொடுக்க முடிய வில்லை.

ஆனால் இரண்டாம் முறை அவர்கள் என்னிடம் வந்த போது, "வேதாகமத்திலிருந்து நான் எடுத்துக்காட்டக்கூடிய வசனங்களை, நீங்கள் படியுங்கள்" என்றேன். ஆனால் அவர்கள், "மூல பாஷையில் அப்படி எழுதப்படவில்லை" என்று பதில் கூறினார்கள். இன்னொரு வசனத்தை எடுத்துச் சொன்னேன்.

மறுபடியும், "மூல பாஷையில் அப்படி எழுதப்படவில்லை" என்றார்கள். "அப்படி என்றால் நீங்கள் கையில் வைத்திருக்கின்ற வேதாகமம் என்ன வேதாகமம்?" என்று கேட்டேன். அதற்குப் பிறகு அவர்கள் என் பக்கம் வரவேயில்லை.

நீங்கள் அவர்களோடு பேசும்போது, "யெகோவா தேவன், இயேசு தேவகுமாரன்" என்பார்கள். பிறகு இயேசு மனுஷகுமாரன்

என்பார்கள். அதன் பிறகு இயேசு ஒரு மனிதன் என்று சொல்லி கொஞ்சம் கொஞ்சமாக இயேசுவினுடைய தெய்வீகத்தன்மையை அவர்கள் குறைத்துக் கொண்டேவந்து, இறுதியாக இயேசு பிதாவுக்குச் சமமானவர் என்பதை நீங்கள் ஏற்றுக்கொள்ளாதபடி உங்களைக் குழப்பிவிடுவார்கள்.

அந்நிய பாஷையாகிய அடையாளம்

மற்றொரு குழுவினர் நம்மைப் பார்த்து, "ஏன் இவ்வாறு அந்நிய பாஷையில் பேசுகிறீர்கள்?. இது என்ன பாஷை? நீங்கள் பேசுவது எங்களுக்குப் புரியவில்லையே" என்பார்கள். அவர்கள் இயேசுவை விசுவாசிக்கிறார்கள். தண்ணீரிலே மூழ்கி ஞானஸ் நானம் எடுக்கிறார்கள். ஆனால் பரிசுத்த ஆவியானவரை ஏற்றுக் கொள்ள மறுக்கிறார்கள்.

இன்று கிறிஸ்தவ உலகிலே பரிசுத்த ஆவியின் நிறைவை விசுவாசிக்காதவர்கள், பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகத்திற்கு ஆரம்ப அடையாளமான அந்நிய பாஷையை விசுவாசிக்காத குழுக்கள் உலகின் பல பகுதிகளிலே உள்ளன.

அடிப்படை உபதேசங்கள்

அஸ்திபாரமான அடிப்படை உபதேசங்களை மறுதலிக்கும் எந்தச் சபையும் உண்மையான சபையாக இருக்க முடியாது. அது ஒருவேளை எண்ணிக்கையில் அநேகரைக் கொண்ட பெரிய ஸ்தாபனமாக இருக்கலாம்.

அல்லது கண்கவர் கட்டிடங்களைச் சொந்தமாகக் கொண்டிருக்கலாம். அல்லது உலகத்தின் பல தேசங்களிலே கிளைகளையுடைய ஒரு பெரிய ஸ்தாபனமாக இருக்கலாம்.

ஆனால் பரிசுத்த வேதாகமத்தின் அடிப்படை உபதேசங்களை அவர்கள் முழுவதுமாய்ப் பின்பற்றாவிட்டால் அந்தக் கூட்டம் ஒரு சபை அல்ல. இந்த உண்மையான ஆவிக்குரிய சத்தியத்தை உணர்ந்துகொண்டவர்கள் ஆசீர்வதிக்கப்பட்டவர்கள்.

சபை ஐக்கியம்

நான் ஒரு கேலிச் சித்தரத்தைப் பார்த்தேன். இரண்டு தேவ ஊழியர்கள் ஒருவரை ஒருவர் சந்திக்கிறார்கள். அவர்கள் ஒருவரோடு ஒருவர் கைகுலுக்கிக் கொள்கின்றனர்.

ஒருவர் தனது இடது கரத்திலே சங்கிலியிலே கட்டப்பட்ட ஒரு சின்ன நாய்க் குட்டியைப் பிடித்திருந்தார். அடுத்தவருடைய கரத்திலேயும் கூட சங்கிலியிலே கட்டப்பட்ட ஒரு சின்ன நாய்க் குட்டி இருந்தது. அந்த இரண்டு நாய்க் குட்டிகளும் ஒன்றை யொன்று பார்த்து குரைத்துக் கொண்டிருந்தன. அதன்மேல் உபதேசம் என்று எழுதப்பட்டிருந்தது.

நாம் எல்லாரும் பிற ஸ்தாபனங்களுடன் அன்பு பாராட்டலாம். இயேசுகிறிஸ்துவின் இரத்தம் தெளிக்கப்பட்டு இரட்சிக்கப்பட்டவர்களோடு கரம்கோர்ப்பதில் தவறில்லை.

ஆனால் அவர்கள் உபதேசத்தை நாம் ஏற்றுக்கொள்ளத் தேவையில்லை. நாம் அப்போஸ்தல உபதேசத்தைப் பற்றிக் கொள்வோம். அதுவே இயேசுவின் உபதேசம்.

இன்று ஆங்காங்கே பல சபைகள் தோன்றியுள்ளன. ஆனால் சபைகள் மத்தியில் ஐக்கியம் இல்லையே, ஏன்? எல்லாக் குழுக்களும் சபையினுடைய அடிப்படை உபதேசங்களை முழு வதுமாக ஏற்றுக்கொள்ளவில்லையே. இதுவே சபை பாகுபாடு களுக்கும் குழப்பங்களுக்கும் முக்கிய காரணமாகும்.

ஒரு கூட்டத்தார் பரிசுத்த ஆவியைப்பற்றிய வேத போதனையைச் சரிவர புரிந்துகொள்ளவில்லை; ஆனால் பரிசுத்த ஆவியின் அபிஷேகம் தேவையில்லை என்று போதிக்கின்றனர்.

பரிசுத்த ஆவிக்கு விரோதமாகத் துணிகரமாகப் பேசுவோரும் நம் நாட்டில் உள்ளனர். பரிசுத்த ஆவியினாலே அன்றி ஒருவனும் இயேசுவை ஆண்டவர் என்று சொல்ல முடியாது.

பரிசுத்த ஆவியின் கிரியை என்பதற்கும், பரிசுத்த ஆவியின் அபிஷேகம் என்பதற்கும் வேறுபாடு உண்டு. பரிசுத்த ஆவியான வரின் கிரியையினால் இரட்சிக்கப்படுகிறார்கள் என்பது உண்மை தான். ஆனால் பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகம் என்பது வித்தியாசமானது. எனவே மனிதரின் உபதேசங்களை நாம் ஏற்றுக் கொள்ளத் தேவையில்லை.

வேத புத்தகத்தில் தரப்பட்ட மூல உபதேசங்களையே நாம் உறுதியாய்ப் பற்றிக்கொள்ளவேண்டும். எவ்வாறு சபை அமைக்கப் படவேண்டும் என்று தேவன் தெளிவு படுத்துகிறாரோ அவ்வாறு அமைக்கப்படும்போது தான் சபை சபையாக இருக்கும்.

எமது வெளியீடுகள்

1. அநாதி கிருபை
2. ஆவிக்குரிய மகிழ்ச்சி
3. ரூத்தின் சரித்திரம்
4. எஸ்தர்
5. தேவ வாக்குத்தத்தங்கள்
6. ஒருவருக்கொருவர்
7. சிலுவையின் உபதேசம்
8. கர்த்தர் சிநேகிக்கிற பரிசுத்தம்
9. அற்புத சாட்சிகள்
10. ஜீவனுள்ள சாட்சிகள்
11. பள்ளத்தாக்கில் நீருற்று
12. அறிவூட்டும் கதைகள்
13. சிந்தனையைத்தூண்டும் கதைகள்
14. இரட்சிப்பின் சாட்சிகள்
15. கிறிஸ்துமஸ் செய்திகள்
16. புத்தாண்டு வாக்குத்தத்த செய்திகள்
17. இயேசு உயிர்த்தெழுந்தார்
18. நல்ல போர்ச்சேவகன்
19. நீதியின் சூரியன்
20. பரதேசிகளாகிய நாம்
21. நாவும் நெருப்புத்தான்
22. மாபெரும் மாற்றம்
23. கிறிஸ்தவக் குடும்பம்
24. Eternal Grace
25. உத்தம ஊழியன்
26. ஜெபத்தின் வல்லமை
27. நீதிமான்கள்
28. பரிசுத்த பர்வதம்
29. நித்திய பிரதான ஆசாரியர்
30. சபை சபைதானா?
31. என் புறாவே
32. யாக்கோபிலிருந்து உதிக்கும் நட்சத்திரம்
33. புத்தாண்டின் தேவ செய்திகள்
34. The Star
35. The New Year
36. கிறிஸ்து இருதயத்தில் வாசமாயிருந்தால்
37. Spiritual Questions
38. கர்த்தர் தரும் ஆசீர்வாதங்கள்
39. குடும்பத்திற்கான ஆசீர்வாதங்கள்
40. புதையுண்ட தாலந்துகள்
41. அந்த மயில்கள்
42. பரிசுத்த ஆவியானவர்
43. Timely Warnings

புத்தகங்கள் கிடைக்குமிடம்:
அப்போஸ்தல கிறிஸ்தவ சபை
13. சண்முகராயன் தெரு, சென்னை - 600 007.